விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 29 சனிக்கிழமை (13.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 206

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# மகிந்த - சம்பந்தன் நேற்று திடீர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கை அரசு மீதான இந்திய அழுத்தங்கள் விரிவு படுத்தப்பட்டிருந்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுக் காலை ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேசியுள்ளார்.

இதன்போது, பிரிபடாத- ஐக் கிய இலங்கைக்குள் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் சாத்தியப் படக் கூடியதுமான நீடித்து நிலைத் திருக்கக் கூடிய தீர்வுத்திட்டம் பற்றி ஆராய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சம்பந்தன் மீண்டும் வலியுறுத்தியதாக த.தே.கூட்டமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இது தவிர, காணி விடயங்கள், மக்களை அவர்களின் ஆரம்ப இடங்களிலேயே மீளக்குடியேற் றுதல், இராணுவப் பிரசன்னத் தைக் குறைத்தல், இராணுவத்தை முகாம்களுக்குள்ளேயே முடககு தல், அரசியல் கைதிகளை விடு வித்தல் உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் பேசப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## படை முகாம்களை அகற்ற முடியாது

### இராணுவத் தளபதி

(கிளிநொச்சி)

வன்னிப் பிரதேசத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவப் படையணிகளுக்கென சொந்தமாகக் காணிகள் வழங்கி, அமைக்கப்பட்டுள்ள முகாம் களை நிரந்தர முகாம் களாக்குவதற்குரிய நடவடிக்கை களை எடுக்கவேண்டும் என கிளி நொச்சிக்கு நேற்று விஜயம் செய்த இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

லெப்டினன்ட் ஜெனரல் தரத்தில் இராணுவ தளபதியாக இருந்து இராணுவப் பிரதானியாக ஜெனரல தரத்தில் பதவி உயர்வு பெற்றுள்ள ஜகத் ஜெயசூரிய, புதிய பதவியை அடுத்த மாதம் முதலாம் திகதி பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளார்.

இந்த நிலையில் அவர் நேற்று கிளிநொச்சியில் இரணைமடுவில் உள்ள மாவட்ட இராணுவ தலை மையகத்திற்கு விஜயம் செய்தி ருந்தார்.

அங்கு படையதிகாரிகள் மற் றும் பெரும் எண்ணிக்கை யிலான படையினர் மத்தி யில் அவர் உரையாற்றி யிருந்தார்.

அப்போது அவர் கூறுகையில், யுத்த (19ஆம் பக்கம் பார்க்க)

## சிசுவை உயிரோடு புதைத்த தாய்

(வவுனியா)

வவுனியா, கிடாச்சூரி, அம்மி வைத்தானில் பிறந்து ஒரே நாளான சிசுவை கிடங்கு வெட்டி உயிருடன் புதைத்த தாயொருவர் தலைமறைவாகியுள்ளதாக வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜெ.ஜெயக் கெனடி தெரிவித்தார்.

அம்மிவைத்தானில் வசித்து வந்த பெண்ணொருவரே நேற்று சிசுவொன்றை பிரச வித்திருந்த நிலையில் அந்த சிசுவை உட னேயே கிடங்கு வெட்டி புதைத்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் விரும்பாததை ஜனாதிபதி திணிக்கமாட்டார்!

### அமைச்சர் மேர்வின் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இதுவரை எந்தவொரு முடிவினை யும் எடுக்கவில்லை எனவும் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ தமிழர்களுக்கு விருப்பமில்லாததை திணிக்க மாட்டார் எனவும் யாழ்பாணத்திற்கு நேற்று வருகை தந்த பொதுமக்கள் உறவுகள் மற்றும் பொது விவகா ரங்களுக்கான அமைச்சர் மேர்வின சில்வா தெரிவித்ததோடு பிள்ளை பிறப்பதற்கு முன்பு பெயர் வைக்க முயற்சிக்காதீர்கள் எனவும் அறி வுரை கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபைத்தேர் தலை முன்னிட்டு பிரசார நடவடிககை யில் ஈடு (19ஆம் பக்கம் பார்க்க)



## மிதிவெடி வெடித்ததில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஹலோ ரஸ்ட் பணி யாளர் ஒருவர் படுகாயமடைந்துள் ளார்.

நாகர்கோவில் குடாரப்பு பகுதி யில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போது மிதி வெடி வெடித்ததில் இவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் வெடிப்புச் சம்பவம் நேற் றுக்காலை 9.30 மணி அளவில் மேற்குறித்த இடத்தில் இடம்பெற் றுள்ளது.

இதில் நாகர்கோவிலைச் சேர்ந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் அசம்பாவிதங்கள் குறித்து முறைப்பாட்டுப் பகுதியில் முறையிடலாம்

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 17 பொலிஸ் நிலையங்களை வடக்கு மாகாண தேர்த லினை முன்னிட்டு தேர்தல் முறைப்பாட்டு பகுதி ஆரம்பிககப்படவுள்ளது என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.சி.எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

தேர்தல் காலங்களில் இடம்பெறும் அச்சுறுத்தல்கள் வன் முறைச்சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதெற்கென்றே விசேடமாக இவ் தேர்தல் முறைப்பாட்டுப் பகுதி ஆரம்பிக்கப்படவுள்ளது என அத்தியட்சகர் தெரி வித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ள வடமாகாண தேர்தல் காலங்களில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வ தற்கு பொலி (19ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தேர்தல் செலவினங்களாக 1500 மில்லியன் ரூபாய் மதிப்பீடு!

(கொழும்பு)

செப்டெம்பர் மாதம் நடைபெற விருக்கின்ற மூன்று மாகாண சபைத் தேர்தல்களுக்கும் ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரி வித்தார்.

வடக்கு, வடமேல், மத்திய ஆகிய மூன்று மாகாணசபைத் தேர்தல்களுக்கே 1500 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மூன்று மாகாண சபைத் தேர்தல்களை யும் நடத்தி முடிப்பதற்கு ஆயிரத்து 350 மில்லி யன ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருந் தது. ஏனினும், மின்கட்டணம், எரிபொருள் ஆகியவற்றின் கட்டண அதிகரிப்பு காரண மாக மதிப்பிடப்பட்டதற்குக் கூடுதலாக பணம் செலவிட நேரிடும் என்றும் என அவர் சுட்டிக் காட்டினார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள சந்திப்பில் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பள்ளிவாசல் மீது நேற்று முன்தினம் தாக்குதல்

## மஹியங்கனையில் அராஜகம்

பதுளை மாவட்டம், மஹியங்கனை நகரில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல் மஸ்ஜிதுல் அரபா மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

புனித ரமழான் மாதத்தில், முஸ்லிம்களின் இரவு நேர தொழுகையான தராவிஹ் தொழுகை முடிந்த பின்னர் சுமார் இரவு 11.10 மணியளவில் ஜந்து அல்லது ஆறு பேர் கொண்ட குழு மஸ்ஜிதுல் அரபா மீது கல் வீச்சு தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில், பள்ளிவாசலின் நான்கு ஜன்னல் கண்ணாடிகளும் ஒரு கதவின் கண்ணாடியும் சேதமடைந்துள்ளன.

பள்ளிவாசலுக்குள் பன்றி இறைச்சியை வீசியதுடன் கழிவறைப் பகுதியும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது பொலிஸார் பள்ளிவாசலில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் மஹியங்கனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை சம்பவத்தை வன்மையாக கண்டித்துள்ள நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் அது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

இது பற்றி பள்ளிவாசல் முக்கியஸ்தர்களுடன் தொடர்பு கொண்டு நிலைமையை கேட்டறிந்த நீதியமைச்சர் ஹக்கீம்,

சம்பவம் நடைபெற்ற காலப்பகுதியில் அப்பகுதியில் மின்சாரம் ஏன் துண்டிக்கப்பட்டிருந்தது என்பதைப்பற்றி விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறும் அப்பிரதேசத்திற்குப் பொறுப்பான மின்சார சபை பொறியியலாளரிடம் அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையை நடத்துமாறும் ஏனைய நாளாந்த சமயக் கடமைகளையும் அச்சமின்றி நிறைவேற்றுவதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இனவாத கும்பல்களால் தலைநகரிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பள்ளிவாசல்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டியது அரசாங்கத்தின் கடமையென்றும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (செ-1)

# "வாங்க மச்சான் வாங்க"

## தமிழில் பாடினார் அமைச்சர் மேர்வின்

(யாழ்ப்பாணம்)

நீலப்படையணியின் அமோக வரவேற்புடன் நேற்றைய தினம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை முன்பாக வந்திறங்கிய



பொதுமக்கள் உறவுகள் மற்றும் பொது விவகாரங்களுக்கான அமைச்சர் மேர்வின் சில்வா வைத்தியசாலைக்குள் சென்று நோயாளர்களுடன் கலந்துரையாடி அவர்களிடம் தேவைகள் குறித்தும் சுகநலன்கள் குறித்தும் கேட்டுக்கொண்டதோடு வைத்தியசாலைக்கு வந்திருந்த குழந்தைகளையும் கட்டி அணைத்து ஆரத்தழுவிக்கொண்டார்.

இவ்வாறு வைத்தியசாலையில் குழந்தையொன்றினை அதன் பெற்றோரிடமிருந்து மிகுந்த ஆவலுடன் அமைச்சர் பெறமுற்பட்ட போது குறித்த குழந்தை அவரிடம் செல்ல மறுத்தபோது "வாங்க மச்சான் வாங்க" எனத் தமிழ்த் திரைப்படப் பாடலைப் பாடியபடி குழந்தையை தன்கையில் வாங்கி வைத்து புகைப்படம் எடுக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து அமைச்சர் மேர்வின் சில்வா சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலிருந்து சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு நடைபவணியாக வந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இதன்போது எதிர்பட்ட அனைவருக்கும் வணக்கம் தெரிவித்த அவர் அரசாங்கத்திற்கு வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதுதவிர அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் சினிமாப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டதோடு தேர்தல் வாக்குறுதிகளும் கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# ஆணின் சடலம் யாழில் மீட்பு

யாழ்.நகர் வீரசிங்கம் மண்டபத்தின் அருகில் உள்ள கட்டடத்தின் உள்ளேயிருந்து ஆணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மன நலம் பாதித்தவர் என்றும் யாழ் பஸ் நிலையப் பகுதியில் சுற்றித் திரிபவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் திடீர் மரணவிசாரணை அதிகாரி முத்துக்குமார் உதயசிறி அங்கு சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

அதன் பின்னர் சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்வதற்கு சடலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (செ-11)

# அமிர்தலிங்கம், யோகேஸ்வரன்

## நினைவு தினம் இன்று

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் அமரர் அ.அமிர்தலிங்கம் மற்றும் வெ.யோகேஸ்வரனின் 24-வது ஆண்டு நினைவுதினம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தமிழர் விடுதலைக கூட்டணியின் நாச்சிமார் கோவிலடியிலுள்ள தலைமைக்காரியாலயத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1989-ம் ஆண்டு 7-ம் மாதம் 13-ம் திகதியன்று கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் அமைந்த கூட்டணியின் அலுவலகத்தில் இவர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டதும் தலைவர் மு.சிவசிதம்பரம் படுகாய மடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (செ-6)

## சிசுவை...

இவ் விடயம் குறித்து அயலவர்களினால் பொலிஸாருக்கும் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இருப்பினும் குறித்த தாய், அப்பகுதியிலிருந்து தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

### கடை வாடகை ஒப்பந்தம் புதுப்பித்தல்

எமது சபையின் சுன்னாகம் உபஅலுவலக எல்லைக்குட்பட்ட பின்வரும் சபைக்குரிய கடைகளின் ஒப்பந்தங்கள் ஒப்பந்தம் செய்தவர்களினால் புதுப்பிக்கப்படாமல் உள்ளன. எனவே 2013.07.18 திகதியன்று ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு ஏதுவாக குறித்த கடை சார்பாக செய்து கொண்ட ஒப்பந்தப்பத்திரத்துடனும் தேசிய அடையாள அட்டையுடனும் சபைத் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். குறித்த திகதியில் தாங்கள் அலுவலகத்திற்கு சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் தங்கள் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

| தொ. இல | கடை இல | வீதி | ஒப்பந்தகாரரின் பெயர் | ஒப்பந்தகாரரின் விலாசம் |
|---|---|---|---|---|
| 01 | 12 | மத்திய சந்தைக்கடை | மாணிக்கவாசகர் கோபிநாதன் | 130,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் |
| 02 | 05 | சந்தை தெற்கு வீதி | சின்னத்தம்பி வைத்திலிங்கம் | ஐயனார் கோயிலடி,சுன்னாகம் |
| 03 | 17 | சந்தை தெற்கு வீதி | சின்னராசா உதயகுமார் | ஊரெழு கிழக்கு,சுன்னாகம் |
| 04 | 19 | சந்தை தெற்கு வீதி | பொன்னம்பலம் நடராசா | சுன்னாகம் கிழக்கு,சுன்னாகம் |
| 05 | 24 | சந்தை தெற்கு வீதி | நவரத்தினம் சிவசக்திவேல் | சுன்னாகம் கிழக்கு,சுன்னாகம் |
| 06 | 22 | சந்தை தெற்கு வீதி | தங்கராசா மனோகரன் | முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம் |
| 07 | 23 | சந்தை தெற்கு வீதி | சங்கரப்பிள்ளை சற்குணநாதன் | முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம் |
| 08 | 29 | சந்தை தெற்கு வீதி | தங்கராசா மனோகரன் | முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம் |
| 09 | 49 | சந்தை தெற்கு வீதி | சிவமூர்த்தி சிவலிங்கம் | 180, யாழ்வீதி, மானிப்பாய் |
| 10 | 41 | மத்தியசந்தை தற்காலிக கடை | இளையதம்பி சுந்தரராசா | Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் |
| 11 | 43 | மத்தியசந்தை தற்காலிக கடை | இளையதம்பி சுந்தரராசா | Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் |
| 12 | 72 | மத்தியசந்தை தற்காலிக கடை | சின்னத்தம்பி இராசையா | 9,ஸ்ரீ விஜய வீதி, கொழும்பு-06 |

தி.பிரகாஷ்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.



## தவறிவிட்டது

279(303) கட்டுகஸ்தோட்ட வீதி,கண்டி எனும் முகவரியினையுடைய மனோன்மணி வசந்தநாதன் என்பவரின் தேசிய அடையாள அட்டை(438540253V) மற்றும் மணிப்பேர்ஸ் என்பன யாழ்ப்பாணத்திற்கும் ஆனைப்பந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.

325,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(அன்னை சத்திர ஒழுங்கைக்கு அருகாமையில்)
0777685910 (3358)



## மாபெரும் ஆடித் தள்ளுபடி

இன்று தொடக்கம் வீட்டுக்குத் தேவையான அனைத்து தளபாடப் பொருட்களையும் ஒரே இடத்தில் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.



0778314201
0773583879

இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில் யாழ்ப்பாணம். (C-3992)





தவத்திரு
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜீ
அவர்களின்

## முதுநிலை தியானப் பயிற்சி

(பகுதி II)

இடம் :
கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்

காலம் :
19.07.2013 - 22.07.2013 வரை
(முழுநாள்)

உணவு, தங்குமிடம் வழங்கப்படும். (C-3991)

தொடர்புகளுக்கு :
0774184484, 0771000750



## பிள்ளையார் இன்

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829 (C-3950)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## புண்ணிய தீர்த்தம்

ஒரு பெரிய மனிதர் இருந்தார். மிகவும் வசதி படைத்தவர். ஒரு நாள் புண்ணிய ஸ்தலங்களுக்காக யாத்திரையை மேற்கொண்டார். போகும் இடமெல்லாம் சமையல் செய்து சாப்பிடுவதற்காக தன்னுடைய வேலைக்காரனையும் அழைத்துக் கொண்டு போனார்.

ஒரு வருடம் முழுவதும் எங்கெங்கோ சுற்றினார்கள் புண்ணிய ஸ்தலங்களுக்கெல்லாம் போனார்கள். புனிதமான தீர்த்தங்களிலெல்லாம் நீராடினார்கள்.

கடைசியாக வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். வந்து சேர்ந்தவுடன் அந்த வேலைக்காரன் சமையல் செய்தான்.

அந்தப் பெரிய மனிதன், அமர வைத்து உணவு சமைத்துக் கொடுத்தான்.

அவர் உண்ண ஆரம்பித்தார். ஆனால் தொடர்ந்து அவரால் சாப்பிட முடியவில்லை. உணவில் ஒரு மாதிரியான வாசனை! மோசமான வாசனை.

"என்னடா சமையல் இது?" என்று பெரிய மனிதர் உரத்த சத்தமிட்டார். அவன் மெதுவாக வந்து அவர் முன்னால் நின்றான்.

"புனிதமான காய்கறிகளை உங்களுக்கு இன்றைக்கு சமைத்துப் போட்டிருக்கிறேன்" என்றான்.

"என்னடா சொல்கிறாய்?" என்றார்.

அவன் மெதுவாக விபரம் சொல்ல ஆரம்பித்தான்.

"அது வந்து... ஐயா... நாம் இங்கு இருந்து புறப்படும் போது நம்முடன் சிறிதளவு உருளைக்கிழங்கையும் எடுத்து வந்தேன். நாம் நீராடிய் போதெல்லாம் நான் இந்த உருளைக்கிழங்குகளைப் புண்ணிய தீர்த்தங்களில் குளிப்பாட்டினேன்.

கங்கை, யமுனை, காவேரி போன்ற புண்ணிய நதிகளில் நீராடிய உருளைக்கிழங்கைத் தான் இன்றைக்கு உங்களுக்குச் சமைத்துப் போட்டேன்" என்றான்.

"என்னடா... இதை இப்படிச் செய்துவிட்டாயே?" என்றார்.

இதெல்லாம் அசுத்தமானது இல்லை. மிகவும் பரிசுத்தமானது! எல்லா நதிகளிலும் நீராடிய இது அசுத்தமென்றால்... எல்லா தீர்த்தங்களிலும் நீராடிய நீங்களும் அசுத்தமானவரா?" என்று கேட்டான்.

அந்த பெரிய மனிதனுக்கு புத்தி வேலை செய்ய ஆரம்பித்தது.

"தீர்த்தங்களில் நீராடுவதால் மட்டும் யாரும் புனிதமடைந்திட முடியாது" என்ற உண்மையை அந்த வேலைக்காரன் மூலமாகப் புரிந்து கொண்டார்.

உடல் சுத்தமாகும் அதே நேரத்தில் மனமும் சுத்தமாக வேண்டும்.

அப்பொழுதுதான் மனிதனாக வாழ முடியும்.

தெய்வமாக உயர முடியும்.

ஒரு புண்ணிய ஷேத்திரம் அங்கே ஒரு தீர்த்தம். அதில் ஒருத்தன். ஒருநாள் முழுவதும் முழுகி எழுந்திருந்தான். அதன்பின் கரையேறி வந்தான். கரையில் உட்கார்ந்திருந்த மகானிடம் ஈரத்துணியுடன் வந்து நின்றான்.

"சுவாமி... நான் கடைத்தேறுவதற்கு வழி சொல்லுங்கள்" என்றான் மிகவும் பணிவாக...

அதுதான்... புண்ணிய தீர்த்தத்தில் நீராடி விட்டாலே பாவமெல்லாம் தொலைந்தது... போய்வா..." என்றார்.

"தொலைந்து பாவம் இல்லை சாமி... என் சம்சாரத்தின் தங்கச்சங்கிலி. நேற்றைய தினம் இங்கே வந்து முழுகும் போது தொலைந்து விட்டது. அதைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தால்தான் சாப்பாடு என்று சொல்லிவிட்டார்! அதுதான் இன்று காலையில் இருந்து அதே இடத்தில் முழுகி முழுகி எழுந்திருக்கின்றேன். சுகப்படும் வழியைக் காணோம்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 226 பேரும் நீதிமன்றில் ஆஜராகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் 226 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குள் 124 பேரும் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குள் 99 பேருமாக மொத்தம் 226 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குள் பிறருக்கு அடித்து காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 32 பேரும் சந்தேகத்தின் பேரில் 18 பேரும், குடித்துவிட்டு கலகம் விளைவித்த 3 பேரும் நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 16 பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 13 பேரும் வீதி விபத்துக்களை ஏற்படுத்திய 6 பேரும் சட்ட விரோதமாக சாராயம் விற்பனை செய்த 8 பேரும் திருட்டில் ஈடுபட்ட 5 பேரும், பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட ஒருவர், பிறர் வீட்டிற்குள் அத்து மீறி நுழைந்த 4 பேரும் கொள்ளையடித்த 8 பேரும், பொது இடத்தில் கலகம் விளைவித்த 10 பேருமாக மூவர் பாதுகாப்புக்கோரியும்சரணடைந்துள்ளதோடு மொத்தம் 127 பேர் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குள் அனுமதியின்றி சாராயம் விற்பனை செய்த ஒருவரும், மது போதையில் வாகனம் செலுத்திய இருவரும், நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 28 பேரும் சந்தேகத்தின் பேரில் 14 பேரும் ஏனைய குற்றங்களுக்காக 54 பேருமாக மொத்தம் 99 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விரு பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலிருந்தும் கைது செய்யப் பட்ட 226 பேரும் நீதிமன்றங்களில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (அ-4)

# அக்கரை மக்களின் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

அக்கரையில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதியன்று அக்கரையில் இடம்பெறவுள்ளது என கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

24 வருடங்களின் பின்னர் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டு உள்ள கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அக்கரை எனும் குக்கிராமத்தைச் சேர்ந்த 38 குடும்பங்கள் தமது காணிகளை துப்பரவு செய்து மீள்குடியேற இராணுவத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அடிப்படை வசதிகளான குடிநீர், வசிப்பதற்கான வீடு எவையும் இல்லாத நிலையிலும் பற்றைகள் சூழ்ந்த சமாந்தரமற்ற நிலப்பகுதியில் மக்கள் வசிக்க முடியாது என மீள்குடியேற்றம் என அழைக்கப்பட்ட மக்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இப்பகுதியில் நீர்த்தாங்கிகளை வைத்து குடிநீர் வழங்குவது எனவும், இந்திய வீட்டுத்திட்டத்திற்கான முதற்கட்ட நடவடிக்கையை மேற்கொண்டு மக்களின் வதிவிடத்தை உறுதி செய்வது எனவும் முன்பள்ளி, தொழில் ஆதாரங்களினை பெற்றுக் கொடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இதில் நேற்று முன்தினம் அக்கரையில் நடைபெற்ற நிகழ்வின் போது இம்மக்களுக்கான உதவிகளை வழங்குவது தொடர்பில் எதிர் வரும் 16 ஆம் திகதி தான் இங்கு வந்து நேரில் மக்களை சந்தித்து இவ் உதவிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் ஆராயவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40-60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100-160 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 120 |
| தக்காளி | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 |
| கோவா | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 160 | 140 |
| பூசணி | 40 | 40 | 140 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 180-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 50 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | — |
| பயற்றங்காய் | 40 | 50 | 40 |
| லீக்ஸ் | 60 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 160 | 300 |
| போஞ்சி | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | — | 20 |
| கீரை - 1 பிடி | 10 | 10-15 | 30 |
| தேசிக்காய் | 100 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | [illegible] | 40 | 35 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 |

# இராசி பலன்

13.07.2013
(ஆனி 29, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
பஞ்சமி மாலை 6.18 மணிவரை
பூசம் பிற்பகல் 5.47 மணிவரை
இராகுகாலம் 8.59-10.29 மணிவரை
சுபநேரம் 2.59-4.29மணிவரை
ஸ்கந்த பஞ்சமி, இரவு நடேசர் அபிஷேகம்

**மேடம்** தாழந்த சுபாவமுண்டு, சில காரிய இடையூகள் ஏற்படலாம், மற்ற வர்களுக்கு உதவுவதில் பிரியப்படுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**இடபம்** தேவையற்ற பயங்கள் ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், புதிய விடயங்களை அறியும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** கூட்டு முயற்சி வெற்றி தரும், அந்நியர் சந்திப்புண்டு, புதிய பொருட் சேர்க்கைகள் இடம்பெறலாம், உங்கள் முன்னேற்றத்தில் உடன் பிறப்புக்கள் அக்கறை காட்டுவர்.

**கடகம்** மாதர் நட்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் தோன்றும்.

**சிங்கம்** கற்பனை மிகுதியான நாள், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டவேண்டிய நாள், போசனசுகமுண்டு, பெரியோர் சந்திப்பால் நன்மையுண்டு.

**கன்னி** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம், பிதா சிந்தையுண்டு, நண்பர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்** உற்சாகமான நாள், காரிய அனு கூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் விதத்தில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** கடின உழைப்பால் உயர்வடைவீர்கள், தூரதேச செய்திகள் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையும், மற்றவர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு** ஆற்றோர் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள், தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மனதில் தேவையற்ற பயம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படும் நாள், வேலைச்சுமை கூடும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் கவனம் எடுக்கவேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** நண்பர்கள் சந்திப்பால் பரவசம் அடைவீர்கள், கௌரவமான நாள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புண்டு, முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை அதிகரிக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் ஒருநாள் வேலை நிறுத்தம்

## அரச தாதியர் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அரச தாதியர் சங்கம் அறிவித்துள்ளது.


இதன்படி எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் மறுநாள் 18 ஆம் திகதி காலை 7 மணிவரை இந்தப் போராட்டத்தில் அரச தாதியர்கள் ஈடுபடவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக அரச தாதியர் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் சங்கத் தலைவர் என்.நற்குணராஜா தெரிவிக்கையில்,

அரச தாதியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளிக்கப்பட்டபோதும் இதுவரை அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

இதன் காரணமாக அரச தாதியர்கள் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

மேலும் எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையின் முன்பாக மாபெரும் கண்டனப் போராட்டத்துடன் கூடிய பேரணியொன்றையும் நடத்த அரச தாதியர் சங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் இதில் யாழ். போதனா வைத்தியசாலையின்அரச தாதியர் சங்கத்தினரும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




# போலிக்காணி உறுதியில் காணி அபகரித்த இருவருக்கு சிறை

(கரவெட்டி)

வடமராட்சி புலோலி மேற்கு பகுதியில் காணி ஒன்றை போலியான உறுதியை தயாரித்து அபகரித்த இரு குற்றவாளிகளுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை வழங்கி பருத்தித்துறை நீதிமன்றம் கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

அல்வாய் வடமேற்கை சேர்ந்த இரு நபர்கள் போலியான உறுதியைப் பயன்படுத்தி காணியில் முக்கால் பங்கை அபகரித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை பொலிசாரால் கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கின் இறுதித்தீர்ப்பு கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரத்தினால் வழங்கப்பட்டது.

இதில் இரு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டமையால் முதலாவது குற்றச்சாட்டான போலி ஆவண உறுதியை தயாரித்தமைக்கு 6 மாத கால சிறைத்தண்டனையும் இரண்டாம் குற்றச்சாட்டான போலி உறுதியை மத்தியஸ்தர் சபையில் பயன்படுத்தியமைக்கு ஆறு மாத கால சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்துடன் போலியான உறுதியை இரத்துச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களுக்கு நீதிமன்றத்தினால் கட்டளை இடப்பட்டுள்ளது. (அ-ம-24)

# பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நட்டஈடு வழங்க உத்தரவு

(கரவெட்டி)

வடமராட்சி அல்வாய் கிழக்கு பகுதியில் கடந்த பங்குனி மாதம் 25 ஆம் திகதி பெரிய மோட்டார் வகை வாகனம் (புல்டோசர்) மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு ஒரு இலட்சத்து 96 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை யாழ்ப்பாண வீதியில் உள்ள இலகடி பகுதியில் பிரதான வீதியில் வீதியை அகலமாக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புல்டோசரும் அதன் பின்னால் வந்த மோட்டார்சைக்கிளும் விபத்துள்ளாகின.

இதில் மோட்டார்சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

இது தொடர்பாக வழக்கு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.வழக்கை நீதவான் விசாரித்துபோது நெல்லியடி பொலிஸாரால் புல்டோசர் சாரதிக்கு எதிராக நான்கு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதில் வாகனத்தை பதிவுசெய்யாமல் செலுத்தியமைக்கு 3 ஆயிரம் ரூபாவும் வருமான வரி பத்திரம் இன்றி செலுத்தியமைக்கு 3 ஆயிரம் ரூபாவும் காப்புறுதி பத்திரம் இன்றி செலுத்தியமைக்கு 25 ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் மோட்டார் சைக்கிள் உரிமையாளரான பெண்ணுக்கு ஒரு இலட்சத்து 96 ஆயிரம் ரூபா நட்ட ஈடு வழங்கவும் நீதவான் உத்தரவிட்டார். (அ-ம-24)




# விவசாய ஓய்வூதியம் கிடைக்கவில்லை

## விவசாயிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

விவசாய சம்மேளனத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியக் கொடுப்பனவு 17 மாதங்களாக வழங்கப்படவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மாதாந்தம் தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கெருடாவில், தொண்டைமானாறு, கம்பர் மலை, உடுப்பிட்டி ஆகிய பிரதேசங்களுக்கு 17 மாதங்களாக வழங்கப்படவில்லை.

விவசாய சம்மேளனம் விவசாயிகளிடமிருந்து 4 ஆயிரத்து 900 ரூபாவை பெற்று 5 வருடங்களின் பின்னர் மேற்படி தொகையை சேமிப்பில் வைத்த விவசாயிகளுக்கு மட்டும் மாதாந்தம் தலா ஆயிரம் ரூபாயை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-60)

# சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

தாலிக்கொடியைத் திருடிய இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தர விட்டுள்ளது.

சுன்னாகம் பெரிய மதவடி பகுதியில் உள்ள வீட்டில் கைப்பையில் வைத்த 9 முக்கால் பவுண் தாலிக்கொடி திருடப்பட்டதாக கடந்த 10 ஆம் திகதி பெண்ணொருவரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் துஷ்மந்த விசாரணைகளை தீவிரப்படுத்தியதையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். பொலிஸாரின் விசாரணைகள் மூலம் திருடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி பொலிஸாரால் மீட்கப்பட்டது.

குறித்த இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம)



தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலர் கலாநிதி சிதம்பரம் மோகன் எழுதிய **13 ஆவது அரசியல் யாப்பு சம்பந்தமான யதார்த்தமும் சில உரிமைகளும்** நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ். நல்லூர் லக்ஸ் விடுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை நூலாசிரியரிடமிருந்து இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (படம்: எஸ்.ஆர்.கரன்)

# சிறுமிகள் மீது வன்புணர்வு; இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரத்தில் 14 வயதுடைய இரு சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

இதில் ஒரு சிறுமி தந்தையாலும் (வயது 69), மற்றைய சிறுமி காதலனாலும் (வயது 23) பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

நல்லூர் பகுதியிலும் மற்றைய சம்பவம் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை பகுதியிலும் இடம்பெற்றுள்ளது.

இவ்விரு துஷ்பிரயோக' சம்பவங்களில் நல்லூர் பகுதியில் தனது சிறுவயது மகளை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரணை செய்த நீதவான் தந்தையை எதிர்வரும் 15 ஆம் திக்திவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவில் நடைபெற்ற சம்பவத்தில் குறித்த இளைஞனோடு காதல் புரிந்து வந்தாலும் 18 வயதிற்குட்பட்ட சிறுமியை சிறுமியின் விருப்பத்துடன் அழைத்துச் சென்றாலும் சட்டத்தின்படி சிறுமி கடத்திச் செல்லப்பட்டதாகவே வழக்குப்பதிவு செய்யப்படும்.

அந்த வகையில் சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய இளைஞர்மீது இரு குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை விடயங்களை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது

## மனித உரிமை பிரதிநிதிகளிடம் கூறினாராம் ஹக்கீம்

(கொழும்பு)

**நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை நாடாளுமன்ற ஒன்றியங்களின் மனித உரிமைகளுக்கான பிரதிநிதிகள் குழு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. நீதியமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.**

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவடைந்து நான்கு வருடங்களாகியும் நாட்டின் மனித உரிமை விவகாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எவற்றையும் காண முடியாதிருப்பதாக நாடாளுமன்ற ஒன்றியங்களின் மனித உரிமைகளுக்கான பிரதிநிதிகள் குழு ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்துள்ளது.

இதன்போது போரால் பாதிப்புக்குள்ளான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இயல்பு வாழ்க்கை படிப்படியாக ஏற்பட்டு வருவதால் இயன்றவரை மக்களுக்கான பாதுகாப்பை பலப்படுத்தி அவர்களின் உரிமைகளை பேணுவதில் கவனம் செலுத்தப்படுவதாக ரவூப் ஹக்கீம் பதிலளித்துள்ளார்.

அத்துடன் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் விடயம் தொடர்பிலும் நாடாளுமன்ற ஒன்றியங்களின் மனித உரிமைகளுக்கான பிரதிநிதிகள் குழு கேள்வி எழுப்பிய பொழுது அந்த விடயத்தில் பொறுப்புக் கூற வேண்டிய பொலிஸாருக்கு உரிய பயிற்சி வழங்குவதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அரசியல் கைதிகள் மற்றும் காணாமற் போனோர் தொடர்பிலும் தகவல்களை அறிந்து கொள்வதில் நாடாளுமன்ற ஒன்றியங்களின் மனித உரிமைகளுக்கான பிரதிநிதிகள் குழு இச் சந்திப்பின் போது அதிக கவனம் செலுத்தியுள்ளனர்.

இதன்போது பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சியமளிப்போரையும் பாதுகாப்பதற்கான ஒரு சட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் நீதியமைச்சர் இதன் போது கூறியுள்ளார்.

நாடாளுமன்ற ஒன்றியங்களின் மனித உரிமைகளுக்கான பிரதித் தலைவர் செனட்டர் ஜூ ஆன் பப்லோ லெடிலியர், அவ்வமைப்பின் மற்றுமொரு உறுப்பினரான செனட்டர் பிரான்ஸிஸ் பங்கிலினன் ஆகியோர் உள்ளிட்ட குழுவினரே நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு

வடமராட்சி வதிரி சந்தியில் கடந்த வருடம் வாகனத்தால் மோதி மனித உயிரிழப்பை ஏற்படுத்திய வாகன உரிமையாளரை உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் வதிரி சந்தியில் ஹயஸ் வாகனம் - துவிச்சக்கரவண்டி விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். இவ்வழக்கு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரம் முன்னிலையில் மன்றில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வாகன சாரதியான நெல்லியடியை சேர்ந்த ரா.நாகநாதன் என்ற எதிராளிக்கு எதிராக நெல்லியடி பொலிஸார் நான்கு குற்றச்சாட்டுக்களை மன்றில் முன் வைத்தனர்.

இதில் முதலாவது குற்றச்சாட்டாக எச்சரிக்கையின்றி வாகனம் செலுத்தியமை, இரண்டாவது குற்றச்சாட்டாக பிழையான முறையில் செலுத்தியமை, மூன்றாவது குற்றச்சாட்டாக விபத்தை தடுக்க தவறியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா மூவாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் விபத்தின் மூலம் உயிரிழப்பை ஏற்படுத்தியமைக்கு உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (அ-ம-24)


A/L பொருளியல் நூல்
MCQ BooK-3
ரூபா 70
வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
(3356)

சிங்கப்பூர் வேலை அனுமதியை பெற்றுக் கொள்வதற்குரிய விளக்கம்
(Employment Pass)
- இரண்டு வருட வேலை
- மாதாந்த சம்பளம் 1250 சிங்கப்பூர் டொலர்
- மாபில் தொழிற்சாலை
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது

முன்பதிவுகளுக்கு மட்டும் 0772568122
107X1250=133,750/=
(3979)
அனி இன்டர் நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இ. 0214921831, 0214921832

லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்
- மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
- போய் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது

முன்பதிவுகளுக்கு மட்டும் 0772568122
(3980)
அனி இன்டர் நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இ. 0214921831, 0214921832

100% CREDIT TRANSFER TO UK, USA, CANADA, NEW ZEALAND, AUSTRALIA & FINLAND
பகுதி நேர வேலை உண்டு
No need IELTS & Financial SPONSOR
Nursing/ Pharmacy/ Physiotherapy
Electrical & Electronic Engineering
Computer Science/ Multimedia
Bus.Admin/ Accounting
Hospitality Management
MALAYSIA வில் மிகக்குறைந்த செலவில் உயர்கல்வியை ஆரம்பித்து கீழே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்கு விசா அனுமதியை மிக இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்
Phd ← MASTER ← DEGREE ← A/L ← O/L → DIPLOMA
UK, USA, CANADA, NEW ZEALAND, AUSTRALIA & FINLAND
OFFER LETTERS Within Three Days
DIPLOMA 3000$/ RS.375,000
COURSE FEE AFTER VISA
BACHELOR 3000$/ RS.375,000
COURSE FEE AFTER VISA
MBA 4000$/ RS.500,000
COURSE FEE AFTER VISA
INTENSIVE ENGLISH 2165$ /RS.270,000
உயர்கல்வியை கற்கும் மாணவர்களுக்கு அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்ட்சி சர்விஸ் முற்றிலும் இலவச சேவையை வழங்குகின்றது.
LINCOLN UNIVERSITY COLLEGE
NO AGE LIMIT
HOTLINES
0772568122
0214921831
0214921832
(சி/3978)
அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்ட்சி சர்விஸ்
இல.72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை உத்தரவாதப்படுத்த கோருகிறார்

## சிவசக்தி ஆனந்தன்



(குருமன்காடு)

**வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறல்கள் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையைத்தடுத்து நிறுத்தவும் கோரி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தினால் மாவட்டத்தின் வர்த்தக நிலையங்கள் அடைக்கப்பட்டதுடன், சகல நிர்வாகச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்தன.**

இப் பிரதேசமீனவர்களின்கோரிக்கையைச் செவிமடுத்து, வெளிமாவட்டத்தைச் சேர்ந்த சட்டவிரோத மீனவர்களின் வரவைத் தடுத்து நிறுத்தவும் இங்கு நிரந்தரமாகத் தங்கியுள்ள அனுமதியில்லாத மீனவர்களை அப்புறப்படுத்தவும் உள்ளூர் மீனவர்களுக்கு கரைவலை மீன்பிடிக்கான நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்கவும் கடல் அட்டை பிடிக்கும் தடைசெய்யப்பட்ட தொழிலைத் தடுத்து நிறத்தவும் உரிய நடவடிக்கை எடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத் தடையை அகற்ற அரசு முன்வர வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட நான்காயிரம் கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளனர். யுத்தகாலத்தில் உயிர், உடைமை மற்றும் உறவுகளை இழந்த இம்மக்கள் மீளக் குடியேறிய பின்னர் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இழந்த செல்வங்களை மீட்டு விட முடியாவிடினும், எஞ்சியுள்ள தமது உறவுகளோடு, உயிர்வாழ்தலுடன் படிப்படியாக மேலெழ, இருக்கும் உபகரணங்களுடன் மீன்பிடித் தொழிலை முன்னெடுத்துவந்த சொற்பகாலத்துள் எமது மீனவர்களை மீண்டும் முன்னேறவிடாமல் பொருளாதார ரீதியாக தாக்கியழித்து முடக்கி விடும் நோக்கிலேயே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமது வாழ்வாதாரத்தை நிரந்தரமாக மேற்கொண்டுவந்த இப்பிராந்திய மக்களின் கடற்பிராந்தியத்தில் இம்மாவட்டத்தைச் சேராத, அனுமதி பெறாத பிற மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் இப்பிரதேசத்தின் மீதான படையெடுப்பும் வகை தொகையற்றவாறான, அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட மீன்பிடிமுறைமை மற்றும் கடலட்டை பிடித்தல் போன்ற செயற்பாடுகளினால் கடல்வளங்கள் சூறையாடப்படுகின்றன.

இதனைத் தடுத்து நிறுத்துமாறு அரசின் அனைத்து மட்டங்களிலும் அழுத்தம் கொடுத்தும் பலனில்லாது போனது மட்டுமின்றி இவ்வாறு படையெடுத்து வந்த வெளிமாவட்ட மீனவர்கள் நிரந்தரமாகத் தங்கியிருந்து தொழில் செய்யவும் அனுமதிக்கப்பட்டிருந்தது.

வடபிராந்தியத்தில் மாதகல், திருவடி நிலை, மயிலிட்டி முதலான தமிழ் மீனவர்கள் பூர்வீகமாகத் தொழிலில் ஈடுபட்ட கடற்பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அங்கு படையினரின் தளங்கள் மற்றும் வீடுகள் நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதனால் பலநூற்றுக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் முடக்கப்பட்டுள்ளது.





மன்னாரில் தலைமன்னார் கிராம மீனவர்களின் தரவைக்கடல் பீடை மீன்பிடிப்பிற்கும் கடற்படையினரால் தடை விதிக்கப்பட்டது. அங்கும் மீனவர் கிராமங்கள் பல உயர் பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்டன. தலைமன்னார், பேசாலை, தாழ்வுப்பாடு, வங்காலை, சிலாவத்துறை கிராமங்களிலிருந்து போர்க்காலத்தில் அகதிகளாக தமது மீன்பிடி வள்ளங்கள் மற்றும் வலைகளுடன் தமிழகம் சென்று அதனைத் தொலைத்த 440 மீனவர்களுக்கு இந்திய அரசால் வழங்கப்பட்ட 175 தொகுதி எஞ்சின், வலை மற்றும் வள்ளங்கள் பாதிக்கப்பட்டோருக்குக் கிடைக்கவிடாமல் செய்யப்பட்டன. திருகோணமலை தென்னமரவாடி, சம்பூரிலும் இத்தகைய நெருக்கடிக்குள்தான் எமது மக்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டு வருகின்றன. அரச வர்த்தமானி அறிவித்தல் படி கொக்கிளாய் ஆற்றில் ஒன்றரை அங்குல அளவுக்கு மேலான வலைகளே விரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த ஆற்றைச் சுற்றி அத்துமீறிக் குடியேறியுள்ள 200 இற்கும் மேற்பட்ட பெரும்பான்மை மீனவர்களால் தடைசெய்யப்பட்ட கூட்டுவலை, இழுப்புவலை, சங்கிலிவலை விரிக்கப்படுவதுடன் ஆற்றில் வள்ளம் எஞ்சின் பாவிக்கப்படுவதனால் மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களால் நீர் மாசடைந்து மீன்களும் இறக்கின்றன.

முல்லைத்தீவின் மிகப்பெரிய சொத்தான கொக்கிளாய் ஆறு, நாயாறு மற்றும் நந்திக்கடலில் 300 இற்கும் மேற்பட்ட வள்ளங்கள் எஞ்சின்களுடன், தடை செய்யப்பட்ட மீன்பிடி மேற்கொள்ளப்படுவதால் மீன், இறால் குஞ்சுகள் இறக்கின்றன.

இவற்றை இல்லாதொழித்து முல்லைத்தீவு மாவட்டத்திலும், தமிழ் மக்கள் வாழ்கின்ற ஏனைய கடல் பிராந்தியங்களிலும் கடற்றொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள எமது மக்கள் நிம்மதியாக தொழில் புரியவும் பொருளீட்டவும் தங்கு தடையின்றி உதவிகள் கிடைக்கவும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் கடந்த புதன்கிழமை கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஊடாக எழுத்து மூலம் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டுமெனவும் தொடர்ந்து இத்தகைய பிரச்சினைகள் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார். (ம-250-266)

# விடியல் அமைப்பால் மாணவர்களுக்கு உதவிகள்




(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலயம் 2002 உயர்தர பழைய மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட விடியல் கல்வி அறக்கட்டளை அமைப்பினால் வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கியிருந்தது.

இதன் முதலாவது சேவையாக, வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 5 ஆம் ஆண்டு புலமைபரிசில் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழிகாட்டி புத்தங்களை வழங்கியிருந்ததுடன் தொடர்ந்தும் வவுனியாவில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளில் தனது சேவையை விஸ்தரித்துள்ளது.

இந் நிகழ்வில் விடியல் அமைப்பின் தலைவர் கி.பிரணவன், உபதலைவர் சி.சிவதர்சன், பொருளாளர் அ.அனுசியன், செயற்குழு உறுப்பினர் சே.நிமலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-266)

# செட்டிகுளம் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

## மாணவர்கள் விசனம்

வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவ தனால் தாம் கற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்வதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

தமது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் பின்தங்கிய பாடசாலைகளாக இருப்பதன் காரணமாக ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாக அறிகின்றோம். எமது பாடசாலைகளுக்கு வரும் ஆசிரியர்கள் சிலர் குறிப்பிட்ட சில நாட்களிலேயே இடமாற்றம் பெற்றுசெல்லும் நிலையும் காணப்படுகின்றது.

இதன் காரணமாக நாம் தொடர்ச்சியாக சில பாடங்களை கற்றுக் கொள்ளமுடியாதுள்ளது.

அத்துடன் சில ஆசிரியர்கள் கிராமப் புற பாடசாலைகளுக்கு போக்கு வரத்து வசதியின்மையால் வருகை குறைவாகவும் உள்ளமையினால் நாம் பரீட்சைக்காலங்களில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

தமது பிரதேசத்திற்கு வரும் ஆசிரியர்கள் இலகுவாக இடமாற்றம் பெறுவதனாலும் முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதனாலும் தாம் கற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வவுனியா நகரத்தில் உள்ள பல பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் தேங்கியுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிப்பதுடன் அவர்கள் இடமாற்றம் பெற்று செல்வதற்கு விருப்பமற்றவர்களாக உள்ளார்கள் எனவும் தெரிவித்தனர். (ம-266)

# கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன

(பூநகரி)

பூநகரி கால்நடை வளர்ப்பு கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் கால்நடை திணைக்களத்தில் பெறப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட நல்ல இன கோழிக் குஞ்சுகள் பூநகரி பகுதியிலுள்ள கோழி வளர்ப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கோழிக்குஞ்சுகளுக்கான கோழித் தீவனமும் சகல மருந்து வகைகளும் கோழி வளர்ப்பாளர்களின் நலன்கருதி பூநகரி கால்நடை வளர்ப்போர் தலைமையகத்தில் விற்பனை செய்யப்படுவதாக சம்பந்தப்பட்ட அலுவலரால் தெரிவிக்கப்படுகிறது. (அ-9-84)



இலங்கை மனித உரிமை அமைப்பும் தேர்தல் கண்காணிப்பகமும் இணைந்து நடத்திய தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை அண்மையில் அக்கராயன் கந்தபுரத்தில் இடம் பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியிலான டெங்கு ஒழிப்பு வாரம்

## டெங்கு வைரஸ் நோயிலிருந்து பாதுகாக்க நீங்கள் செய்ய வேண்டியவை என்ன...?

யாழ்ப்பாண குடாநாட்டில் டெங்கு வைரஸ் நோய் அதிகரித்து வருவதாக சுகாதார வைத்திய பகுதியினர் மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளனர். இது குறித்து மக்கள் விழிப்புணர்வுடன் எச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டியது அவசரமானதும் அவசியமானதுமான



தேவை எழுந்துள்ளது.

மக்கள் இந்நோயால் பீடிக்கப்படுவதை தடுப்பதற்கு தனிப்பட்ட ரீதியில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் நோயால் வந்த அதனை குணப்படுத்துவதற்குச் செய்ய வேண்டிய கருமங்களையும் குறிப்பு வடிவத்திலும் இலகுமுறையில் வடித்துத் தருகின்றோம்.

*டெங்கு தொற்று என்பது என்ன?*

இது நுளம்பினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோய். இது இரு வகையாக வெளிப்படும்.

அ) டெங்கு காய்ச்சல்(DF)

ஆ)இரத்த தாக்கத்தை உண்டாக்கும் டெங்கு காய்ச்சல்(DHF)

*டெங்கு காய்ச்சலின் குணம் குறிகள்*

அ) சடுதியாக ஏற்படும் காய்ச்சல்

ஆ) கடுமையான தலையிடி

இ கண்ணின் பிற்பகுதியில் நோ

ஈ) தசை எலும்பு மூட்டுக்கள் போன்றவற்றில் கடும் நோ

இரத்த தாக்கத்தை உண்டாக்கும் டெங்கு காய்ச்சலின் குணங்குறிகள்

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் உறுப்புக்களில் இரத்தம் கசிதலும் அதிர்ச்சி நிலை ஏற்படும் நிலையிலும் சாதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டு 2-3 நாட்களில் காணப்படும் இந்த நிலை 5-6 நாட்கள் (103பாகை-105 பாகை) தொடரும். 3-4 நாட்களில் குறைந்து மீண்டும் வரக்கூடும். இந்த நிலையில் நோயாளிக்கு பலவீனமான நிலை ஏற்பட்டு இயலாத் தன்மை ஏற்படும். இந்நோய் மக்களிடையே சடுதியாக பெருகி பலரை தாக்கும் சக்தி கொண்டது.

*டெங்கு காய்ச்சலை அடையாளம் காணும் வழிகள்*

அ) சடுதியாக ஏற்படும் காய்ச்சல்

ஆ)கடுமையான தலையிடி குறிப்பாக நெற்றிப்பகுதிகளில்

இகண்களின் பிற்பகுதிகளில் கடும் நோவும் கண்களை அசைக்கும் போது நோவு கூடுதலும்.


ஈ) உடலின் முழு பகுதிகளிலும் மூட்டுக்களிலும் நோ

உ) ஓங்காளம், வாந்தி எடுத்தல்

கடுமையான டெங்கு, இரத்த தாக்க நிலை அதிர்ச்சி நிலையை எவ்வாறு காண்பது

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் கீழே தரப்படும் ஏதாவது 1-6 வரையான குணம் குறிகள் இருப்பின் ஆபத்து நிலையாக கணிக்கலாம்.

1)கடுமையான, தொடர்ச்சியான வயிற்று நோ அல்லது வலி



2) மூக்கு, வாய் , முரசு , தோலின் அடியில் குருதி ஒழுக்கு காணப்படும்.

3) அடிக்கடி குருதி கலந்தோ அல்லது இல்லாமலோ வாந்தி எடுத்தல்.

4) மலம் கறுப்பு நிறமாக வெளியேறுதல்

5) நாவரட்சி மற்றும் தண்ணீர் தாகம் ஏற்படல்


6) வெளிறிய அல்லது குளிர்ந்த நிலையில் தோல் காணப்படல்

*நோயை இனம் காணும் முறைகள்*

சுலபமாக செய்யக்கூடிய ஆய்வு முறைகள் (Platelet count,PCV count , Touniquet test, Haematocrit test, Scanning test, Dengue Antibody test) எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட குணங்கள் இருப்பின் சிகிச்சை உடன் மேற்கொள்ள வேண்டும்.

*சிகிச்சை முறை*

டெங்கு நோய் என்று கருதினால் ஒரு தகைமையுள்ள வைத்தியரை கொண்டு பரிசோதித்தல் அவசியம்.ஆரம்பத்தில் சிகிச்சை



மேற்கொண்டால் மட்டுமே சிக்கல் ஏற்படுவதையும் உயிரிழப்பையும் தவிர்க்கலாம். அஸ்பிரின்(Aspirin), புறுபென்(Brufen) கொடுப்பதை தவிர்க்க வேண்டும். அவை நோயை சிக்கலாக்கும். பரசெற்றமோல் (Paracetamol) வைத்திய ஆலோசனையுடன் கொடுக்கலாம். கடுமையான வயிற்று நோவு, கறுப்பு நிறமாக மலம் வெளியேறுதல், கடும் வியர்வை வெளியேறுதல், மூக்கு , வாய் , தோலுக்கு அடியில் இரத்த கசிவு காணப்படுதல், குளிர்ந்த தோல் என்பன நோயாளிக்கு உயிராபத்து ஏற்படுவதற்கான அறிகுறிகள். ஆகவே அவ்வேளையில் உடனடியாக வைத் தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

*டெங்கு பற்றிய அடிப்படை தகவல்கள்*

1)Aedes வகை நுளம்பினால் இந்த நோய் தொற்று ஏற்படலாம்

2) ஒரு நோயாளியை கடித்த நுளம்பு ஒரு சுகதேகியை கடித்தால் அவருக்கு 5-7 நாட்களில் நோயின் அறிகுறி தென்படும். எந்த நுளம்பு நோய் காவியாக இருந்தது என்பதை கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் நுளம்பு கடியிலிருந்து பாதுகாப்பது முக்கியம்.

**நுளம்பு பெருகும் இடங்கள்**

நீர் தேக்கங்கள், நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப்பட்டிருக்கும் வெற்று போத்தல்கள் , பாவனைக்கு உதவாத சட்டிகள் போன்றவற்றிலும் , தண்ணீர் தொட்டிகளிலும் மழைநீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் நுளம்பு பெரு கும். தண்ணீரை தேக்கி வைக்கும் கொள் கலன்கள் மூடப்படாமல் இருப்பின் அவை 7 நாட்களுக்கு ஒருமுறை மாற்றப்பட வேண்டும். இல்லையேல் நுளம்பின் குடம்பிகள் உருவெடுத்து பெருகும்.

*நுளம்பு கடிப்பதை தவிர்த்தல்*

அ) டெங்கு நுளம்பு பகலில் கடிக்கும் அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ஆ) முழு நீள மேற்சட்டை மற்றும் கால்களை பாதுகாக்கும் வகையில் உடை அணிதல்

இ நுளம்பு வராமல் தடுக்கும் மருந்துகளை பாவித்தல்

ஈ) நுளம்பு சுருள் மற்றும் அழிக்கும் இரசாயன பொருட்களை பாவித்தல்

உ) நுளம்பு வலைகளை பயன்படுத்தல்(குறிப்பாக குழந்தைகள் சிறார்களுக்கு) (Permithrin)மருந்து தெளித்த நுளம்பு வலைகள் மற்றும் கதவு, ஜன்னல் வலைகளை பயன்படுத்தல்

ஊ) நோய் பரம்பலை கட்டுப்படுத்தும் நடவடிக்கை எடுத்தல் , நோயாளியிடமி ருந்து ஏனையோருக்கு பரவாமல் நடவடி



க்கை எடுப்பது அவசியம்.

*நுளம்புகள் பெருகுவதை தடுத்தல்*

டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் ஒவ்வொரு வீட்டின் சுற்று புற்றத்தில் உள்ள நீர் தேங்கும் இடங்களில் பரவுகின்றது.

அதனை தடுப்பதற்கு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வருமாறு,

அ) வீட்டு சூழலில் உள்ள நீர் தேங்கும் நிலைகளை ஒழித்தல்

ஆ) வீட்டிற்குள் வைக்கும் சாடிகள் , கோப்பைகள் போன்றவற்றுள் நீர் நிலைத்து நிற்காமல் சுத்தப்படுத்தல்

இ தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் வாளிகளை மூடிவைத்தல்

ஈ)பாவித்த எறிந்த போத்தல்கள் மற்றும் பாத்திரங்களை சுற்று சூழலில் இருந்து அகற்றி அழித்தல்

சுகாதார பகுதி ,உள்ளூராட்சி சபைகளுக்கு மக்கள் உதவியினால் இந் நோயை கட்டுப்படுத்தலாம்.

வருமுன் காப்போம்

வைத்திய கலாநிதி
Dr.இ.தெய்வேந்திரன்
(வெளிநோயாளர் பிரிவு,
புதிய யாழ் வைத்தியசாலை)

### புத்தகாயா விவகாரத்தால்

## முஸ்லிம்களுக்கு அநீதி ஏற்பட இடமளியோம்

(கொழும்பு)

இந்திய பீஹார் மாநிலத்தில் உள்ள புத்தகாயாவில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் ஒரு முஸ்லிம் அமைப்பு சம்பந்தப்பட்டிருப்பதை சாட்டாக வைத்து இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள எடுக்கப்படும் முயற்சிகளை அரசு ஏற்றுக் கொள்ளாது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

வேறு ஒரு நாட்டில் நடைபெறும் ஒரு சம்பவத்தை இலங்கையுடன் இணைத்து வீண் பிரச்சினைகளை ஏற்படுத்துவதில் சில இணையத்தளங்கள் ஈடுபட்டு வருவது எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அச்சம்பவத்தை வைத்துக் கொண்டு இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசாங்கம் இடமளிக்காது என்றும் கூறினார். (அ-2)

## 13 ஆவது திருத்தத்தில் அரசாங்கம் மாற்றம் செய்யும்- விமல் வீரவன்ச

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலை நடத்தினால் பதவி விலகுவதாக நான் கூறவில்லை. தேர்தலுக்கு முன்னர் 13 ஆவது திருத்தத்திலுள்ள பிரிவினைவாதத்திற்கு வழி வகுக்கும் சரத்துகளை நீக்குமாறு கோரியிருந்ததாக பொறியியல் நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. இதனை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு இதற்காக தெரிவுக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

வாய்மூல விடைக்காக கேள்வி எழுப்பிய சஜித் பிரேமதாஸ எம்.பி. வட மாகாண தேர்தலை நடத்தினால் பதவி விலகுவதாக அமைச்சர் விமல் வீரவன்ச கூறியது குறித்து வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் 13 ஆவது மாற்றம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தெரிவுக்குழுவினூடாக தேவையான மாற்றங்களை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேனனிடம் கொடுத்த வாக்குறுதியை இலங்கை காப்பாற்ற வேண்டும்

## கலைஞர் கருணாநிதி அறிக்கை



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து திரும்பிய பின்னர் மேனன் வெளியிட்ட தகவலை அடிப்படையாக கொண்டே கருணாநிதியின் இக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

(சென்னை)

**இலங்கை சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவில்லை, இலங்கை அகதிகள் அவுஸ்திரேலியா செல்ல அரசுகள் உதவ வேண்டும் என தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனிடம் மீண்டும் இலங்கை உறுதிமொழியை வழங்கியுள்ளது.**

இதேவேளை, இலங்கை அசராங்கம் உறுதிமொழிகளை வழங்கும், அதேநேரம் தமிழக மீனவர்கள் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இது இலங்கையின் உதாசீனப் போக்கை காட்டுகிறது.

அத்துடன் இலங்கை அகதிகள் அவுஸ்திரேலியா செல்ல அரசுகள் உதவ வேண்டும்.

அவுஸ்திரேலியாவுக்குத் தப்பமுயன்ற இலங்கை அகதிகள் 17 பேரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இலங்கையில் வாழமுடியாமல் இந்தியாவுக்கு வந்து அகதிகளாக பல ஆண்டுகளாக வாழும் அவர்களின் பரிதாபகரமான வாழ்க்கை நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவுஸ்திரேலியாவுக்குச் சென்று வசதியுடனும், சுதந்திரமாகவும் வாழ முடியுமென்றால், அவர்களின் நல்வாழ்க்கையில் நாம் குறுக்கிடாமல் அவுஸ்திரேலியா செல்வதற்கு மத்திய, மாநில அரசுகள் தம்மால் இயன்ற உதவியைச் செய்ய முன் வரவேண்டும்.

இதற்கு மாறாக அவர்களைக் கைது செய்து, சிறையில் அடைப்பதால் பயன் ஒன்றும் இல்லை. எனவே, அகதிகள் பிரச்சினையில் மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு நல்ல முறையில் தீர்க்க அரசு முன்வர வேண்டும்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவது பல ஆண்டுகளாக தொடர் கதையாக நீடித்து வருகிறது. இது தொடர்பாக மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடிய உள்ளார். இலங்கைக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் விரைவான அரசியல் தீர்வு காண்பதற்கு, 13 ஆவது அரசியல் சட்ட திருத்துக்கும் அப்பால் , இந்திய அரசுக்கும், சர்வதேச சமுதாயத்துக்கும் அளித்தவாக்குறுதியை இலங்கை பின்பற்றி அதிகாரப் பகிர்வு வழங்குவது அவசியம். இதை ராஜபக்ஷவிடம் சிவ்சங்கர் மேனன் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தப்படும் என்று நம்புகிறோம்.

இந்திய மீனவர்கள் தாக்கப்படும் விவகாரம் தொடர்பாக ராஜபக்ஷவிடம் பேசப்பட்டுள்ளது. எந்த நிலையிலும் வன்முறையில் இறங்காமல் மனிதநேய அடிப்படையில் செயற்பட வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இதுவரை எந்த ஒப்பந்தத்தையும், உறுதிமொழியையும் இலங்கை காப்பாற்றவில்லை. சிவ்சங்கர் மேனனிடம் கொடுத்த வாக்குறுதியை எந்த அளவுக்குக் காப்பாற்றப் போகிறது என்பது தான் பிரச்சினை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



யுத்தம் காரணமாக உயிரிழந்த – காயமடைந்த மற்றும் சொத்துக்களை இழந்த வட மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பயனாளி ஒருவருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நட்டஈட்டுத் தொகை வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

# இலஞ்சம் மற்றும் ஊழல் முறைப்பாடுகள் அதிகரிப்பு

பொதும்க்களிடம் இருந்து சமகாலத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் அதிகளவில் கிடைக்கப் பெறுவதாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் நிறைவேற்று பணிப்பாளர் லக்ஸ்மன் ஜயவர்த்தன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலப் பகுதியில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான அதிகளவிலான முறைப்பாடுகள் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அதிகளவிலானவை துஷ்பிரயோகம் தொடர்பானவை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி சென்ற யாழ்தேவி புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் உரியிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதவாச்சி பொலிஸ் பிரிவின் புனாவ, பலுகொல்லாவ என்ற இடத்தில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் 56 வயதான விமலசிறி என்பவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-5)

# தீவக பிரதேசத்தில் நடமாடும் கண்சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

விஷன் 2020 திட்டத்தின் அனுசரணையுடன் தீவகப் பிரதேச வைத்தியசாலைகளில் கண் வைத்திய நிபுணர்கள் கொண்ட குழுவினரால் நடமாடும் கண்சிகிச்சை நடத்தப் படவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை,17 ஆம் திகதி காலை 8 மணிக்கு வேலணை பிரதேச வைத்தியசாலை, பிற்பகல் 2 மணிக்கு புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலை,18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நயினாதீவு பிரதேச வைத்தியசாலை, பிற்பகல் 2 மணிக்கு அனலைதீவு பிரதேச வைத்தியசாலை, 19 ஆம் திகதி காலை 8 மணிக்கு காரைநகர் பிரதேச




வைத்தியசாலை ஆகிய இடங்களில் இச்சேவை இடம்பெறவுள்ளன.

எனவே, பொதுமக்கள் இச் சேவையை பெற்று பயனடையலாம் என சுகாதார சேவைகள் பணிமனை பிராந்தியப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

# 13ஆவது திருத்தத்தை இரத்தாக்க கோரி உச்ச நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்யுமாறு அல்லது அதனை அமுல்படுத்தக் கூடாது என தடை உத்தரவு விதிக்குமாறு கோரி உச்ச நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிறுவர் நலன்புரி தொடர்பான அறக்கட்டளை ஒன்றின் தலைவரும் நீர்கொழும்பைச் சேர்ந்தவருமான நபர் ஒருவர் இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால் மக்கள் ஆணை, நீதிமன்றின் சுயாதீனத்தன்மை போன்றவற்றுக்கு குந்தகம் ஏற்படும்.

அனைத்து பிரஜைகளும் சமமானவர்கள் என்ற அரசியல் அமைப்பின் அடிப்படை சரத்துக்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மீறப்பட்டுள்ளன.

13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி ஏழு பேரைக் கொண்ட நீதியரசர்களினால் செய்யப்பட்ட பரிந்துரைகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன.

எனவே, 13 ஆவது திருத்தச் சட்டம் நாட்டில் அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமாக கருதப்பட முடியாது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதிகை மலை



## ஆன்மீகம் 60

### அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

...எல்லோரும் கீழே சங்கு முத்திரைக்கு வந்தோம். மழை எப்போதும் சாரல் அடிப்பதால் காய்ந்த குச்சிகள் காணோம். குளிர் வேறு உடலை வாட்டுகிறது. குளிர்க்குத் தகுந்த ஒரு சூரணம் வாயில் போட்டுக் கொண்டு மற்றவர்களுக்கும் கொடுத்தேன். எல்லோரும் ஏகாந்து தெய்வீக சிந்தனையில் இருந்தனர். அக்கினி வளர்க்க வேண்டுமே என்று தேடினேன். பாறையில் காய்ந்த ஒரு மரத்தை எடுத்து கற்பூரம், நெய் ஊற்றி அக்கினி பற்ற வைத்து எல்லோரும் ஒரு சிந்தனையாய் ஓம் என்ற ஓங்கார ஒலி சப்தம் செய்ய அந்தி வேளையில் இருள் சூழும் நேரத்தில் மிகவும் ரம்மியமாய் இருந்தது. என்னை அறியாமல் ஏதோ ஒரு காந்தக சக்தி என் மீது பாய்வதை உணர்ந்தேன். விடாமல் ஓங்கார ஒலியுடன் மெதுவாய் கண் திறந்து பார்த்தேன். ஆயிரக்கணக்கான எலும்புடன் தாடி வளர்த்த ரிஷிகள் மும்முரமாய் தவ நிஷ்டை புரிவதை கண்டு பயந்து அடியேன் கண்களை மூடி தியானத்தில் அமர்ந்தேன். அன்று முழுவதும் தேவலோகம் கைலாயத்தில் இருப்பதாகவே உணர்ந்தேன். எத்தனை விதமான தெய்வீகக் காட்சிகள், எதை சொல்வது. அவர்! அவர் கண்டதும் அவர் அவருக்கு ஒவ்வொரு சித்து புருஷரும் பொதிகை முனிவரின் அருள் பெற்றுத்தான் விமோசனம் அடைவார்கள் என்று சஷ்கோண மகரிஷி வேதங்களுக்



பொதிகை மலையில் ஸ்ரீ காகபுஜண்டரை மலைவாசிகள் வரவேற்கிறார்கள்.

கெல்லாம் முன்தோன்றிவர் கூறியிருக்கிறார். தரும சிந்தனையுடையவர்களை தருமதேவனை இங்கு அழைப்பார்.

பொதிகை மலையில் தென்றலும் சாமரம் வீசும் போது இயற்கை அன்னை நம்மை வரவேற்று உபசரிப்பதுபோல் இருக்கும். இங்கு இருக்கும் தெய்வீக மூலிகைகள் கண்டவர் கையில் கிடைத்தால் அது மனித குலத்துக்கே சீரழிவு என்பதால் அந்த மூலிகைகள் பலிதமில்லாமல் சத்து அழியட்டும் என்று அகத்தியர் சாபமிட்டதால் அதைக்கொண்டு வந்து மருந்து செய்தால் தற்காலத்தில் பலன் இல்லாமல் போய்விடும் கலிகாலமல்லவா?

கெட்டவர் வலுத்து நல்லவர்கள் நலிவுறும் காலமல்லவா- அதனால் இம்மூலிகைகளை வியாபார நோக்கோடு பறித்து- பணம் கொழிக்கலாம் என்ற முயற்சி பலிக்காது. அன்று அகத்தியர் இட்ட சாபத்தால் வருந்திய ரிஷிகளும் சித்தர்களும் அகத்தியரை அணுகி- சாபத்தினை அகற்ற வேண்டும் என்று தாம் ஆசைப்படுவதாக அறிவித்தனர்.

அதற்கு அகத்தியர் சில மந்திரங்களை உபயோகித்து- மூலிகைகளின் சாப விமோசனத்திற்கு சில சாஸ்த்திரங்களையும் அறிவித்து- இந்த வகையில் முயன்று மூலிகையைப் பூஜித்து எடுத்தால் பலன் தரும் என்று அருள் புரிந்தார். ஆதலால் இந்த சாப விமோசன வழி வகைகள் சித்தர்களும் சித்தர்கள் வழி நடக்கும் நன் மாணக்கர்களும்தான் கையாளமுடியும். கண்டவர்கள், பரம்பரை மருத்துவர்கள் என கட்டியும் கூறிக் கொள்பவர்கள், தரும சிந்தனை இல்லாத வைத்தியர்கள், ஏட்டுச் சுரைக்காய் இதைச் செய்ய முடியாது! அப்படி செய்தோம் என விளம்பரம் செய்பவர்கள் போலிக்களாகத்தான் இருக்க முடியும். இதனால்தான் மணி மந்திரம் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்னும் ஆங்கிலச் சொல்லை இந்த மணி மந்திரம் என்று முன்னோர் தம் வாக்கிலுள்ள மணி என்ற வாக்குக்கு பொருள் கொண்டு பணம் பண்ண பறக்கிறவர்களிடம் சிக்கினால்- நோய் போகாது. வைத்தியனின் வங்கிக் கணக்கு வளரும். ஆதலால் சித்தர் வழி வந்தோர் யார் என்று ஆராய்ந்து அவர்களை அணுகினால் ஆரோக்கியம் உங்கள் கதவைத் தட்டும்.

தொடரும்

# வடக்கு கிழக்கை இரண்டாகப் பிரித்தது பலவீனப்படுத்தும் ஒரு தீர்மானம்



விவேக் கற்ஜ்

**இவ்வாறு ஆப்கானிஸ்தானின் முன்னாள் இந்திய தூதர் விவேக் கற்ஜ் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது...**

நவம்பரில் பொதுநலவாய அமைப்பின் அரசாங்கத் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாடு இடம்பெறுவதற்கு முன்னர் வடக்கு மாகாண சபைத்தேர்தல்களை நடாத்தவேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ச விரும்புகிறார். தற்போதுவரை இலங்கை அதிபரால் அரசியல் யாப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும சில கட்சிகள் எதிர்த்துள்ளன.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் இலங்கையில் பல்வேறு மீள்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது உண்மை. ஆனால், வடக்கு மாகாணசபை ஆளுநராக ஓய்வு பெற்ற இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளதானது பொதுநிர்வாகம் எவ்வளவு தூரம் ஜனநாயகவழியில் நடைபெறுகின்றது என்பது கேள்விக் குள்ளாக்கியுள்ளது.

நீண்டகாலம் போர் இடம்பெற்ற இலங்கையில் உடனடியாக மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கமானது அந்நாட்டு இராணுவத்தையும் உள்வாங்கலாம் என்பது உண்மையான விடயமாகும். ஆனால், வடக்கில் குவிக்கப்பட்ட இராணுவத்தினரைக் குறைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துவரும் நிலையில் பொது நிர்வாகத்தில் இவ்வாறு இராணுவத்தின் தலையீடு காணப்படுவது அதிருப்தியைத் தருகின்றது. பாதுகாப்பு நோக்கங்களுக்காக மக்களின் காணிகளை இலங்கை இராணுவத்தினர் அபகரிப்பது தொடர்பில் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடக்கில் அதிகளவு இராணுவத்தினர் பெருமளவு இராணுவ வசதி வாய்ப்புக்களுடன் குவிக்கப்பட்டுள்ளதானது ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் வாழ்வில் தலையீடு செய்வதாக நோக்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் பிரிவினைவாதம் தொடர்பான அச்சுறுத்தல் நீக்கப்பட்டுவிட்டது என நம்பப்படுகின்ற போதிலும் மகிந்த ராஜபக்சவும் சிங்களத் தேசியவாதிகளும் பிரிவினைவாதம் என்பது முற்று முழுதாக ஒழியவில்லை எனக் கருதுகிறார்கள்.

அதாவது குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் தனித் தாய்நாட்டை அடைவதற்கான குறிக்கோள் மிக வலுவாகக் காணப்படுவதே இதற்கான காரணமாகும். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புலம்பெயர் தமிழ் சமூகமானது இலங்கை மீது அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்நிலையில் புலம்பெயர் தமிழ் சமூகமானது எதிர் காலத்தில் இலங்கையின் வடக்கில் வன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் இதற்கான தளமாக அங்கீகரிக்கப்படும் வடக்கு மாகாண சபையானது அமையலாம் எனவும் நம்பப்படுகிறது.

21 வது நூற்றாண்டில் பயங்கரவாத வன்முறை என்பது மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளபோதிலும் பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டில் அங்கு வாழும் அனைத்து இன மற்றும் மத சமூகங்களின் நியாயமான அவாக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களின் அடையாளம், நீதி, ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திகள் போன்ற பல்வேறுபட்ட உரிமைகள் மதிக்கப்படும் போது இவ்வாறான பயங்கரவாதம் என்பது தோன்றுவதற்கான வாய்ப்பு காணப் படாது.

சிறுபான்மை சமூகங்கள் பெரும்பான்மை சமூகங்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்ப்பதை தவிர்த்து பெரும்பான்மை சமூகங்களின் தேவைகளையும் மதித்து புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். வரலாற்று ரீதியான பதிவுகள், புராதன காலப் பதிவுகள், போர்க்களங்களில் கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகள் போன்ற பல்வேறுபட்ட அனுபவங்கள் நாட்டு மக்களின் தலையெழுத்துக்களை, நாட்டின் தலையெழுத்தை இந்த நவீன காலத்திலும் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கருதும் தலைவர்களுக்கு வழிகாட்டுதலாக இருக்க முடியாது.

பெரும்பான்மை தமிழ் அரசியல் வகுப்பின் மனங்களை வெல்லக்கூடிய மிகச் சிறந்த மைக்கல்லாக 13 ஆவது திருத்தச் சட்டம் காணப்படுகிறது. வடக்கு- கிழக்கு பிரிக்கப்படக் கூடாது என 13 ஆவது திருத்தச்சட்டத்தில் கூறப் பட்ட போதிலும் வடக்கு கிழக்கு தற்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது உண்மையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை பலவீனப்படுத்துகின்ற ஒரு தீர்மானமாகும். இந்நிலையில் இத்திருத்தச்சட்டத்தை மேலும் பலவீனப்படுத்துவதற்காக எடுக்கப்படும் எந்தவொரு நகர்வுகளும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

13ஆவது திருத்தச்சட்டம் அமுல் படுத்தப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். அண்மையில் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்சித் இலங்கை வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த போது இலங்கை அதிபர் அறிவித்த காலவரையறைக்குள் வடக்கு மாகாண சபைத்தேர்தல் நடாத்தப்பட வேண்டிய தேவையுள்ளதாக வலியுறுத்தியிருந்தார்.

இந்தியாவானது இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாடு தொடர்பில் மிக உறுதியான பலமான அர்ப்பணிப்பை வழங்கும், அதேவேளையில் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் சமூகத்தின் நலனுக்காகவும் உரிமைக்காகவும் ஒலிக்கும் குரல்களையும் உணர்வுகளையும் இந்தியா முழுமையும் பகிர்ந்துகொள்கிறது.

இவ்வாறான விடயங்களைக் கருத்திற்கொண்டு இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ செயற்படுவாரா? மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு செயற்படாவிட்டால் இந்தியா எத்தகைய நடவடிக்கையை எடுக்கும்? கடந்த காலத்தில் இவ்வாறான குழப்பகரமான சூழலை வெற்றி கொள்ள உதவிய தொடர்பாடல் ஊடகங்கள் தற்போது மிக விரைவாகச் செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

513

## தங்க வளையல்



கந்தன் என்ற வயது முதிர்ந்த விவசாயி தனது மகன் கோபாலனுடனும், மருமகள் ருக்மணியுடனும் ஒரே வீட்டில் வசித்து வந்தான். ருக்மணியின் தம்பி முத்துவும் அவர்களோடு வசித்து வந்தான்.

கந்தன் தனது இடது கையில் தங்கத்தாலான ஒரு கங்கணம் அணிந்து வந்தான். அதைப் பார்க்கும்போதெல்லாம் அவனுடைய மருமகள் ருக்மணியின் கண்கள் பேராசையால் விரியும். தனக்கு அதை வளையலாக்கித் தரக் கூடாதா என்று அவள் நினைப்பது

**அம்புலிமாமா கதைகள்**

உண்டு. ஆனால் கந்தனோ, தங்கக் கங்கணம் தன் கையில் இருக்கும் வரை, தன் மருமகள் தன்னை மதிப்பாள் என்று அதை அவளுக்குத் தராமல் காலம் கடத்தி வந்தான்.


ஒரு நாள் கந்தன் நீண்ட நேரம் இருட்டும் வரை வயலில் வேலை செய்தான். வீட்டிற்குச் செல்ல முனைந்தபோது திடீரென்று இருட்டில் அவனால் எதையுமே பார்க்கமுடியவில்லை. தன் வீட்டிற்கு எப்படிச் செல்வதென்றே தெரியாமல் கலவரத்துடன், "ஐயோ! எனக்குக் கண் தெரியவில்லை! எனக்கு யாராவது உதவி செய்யுங்கள்!" என்று கூச்சலிட்டான்.

அந்த நேரம், அவனுடைய மருமகளின் தம்பி முத்து அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தவன் கிழவன் கூச்சலிடுவதைக் கேட்டு அங்கு வந்தான். கிழவன் கஷ்டப்படுவதைக் கண்டு முத்துவின் மனதில் ஒரு தீய எண்ணம் தோன்றியது. அவனுடைய அக்கா ருக்மணியைப் போலவே, அவனும் கந்தனுடைய தங்க கங்கணத்தின் மீது பல நாள்களாக ஒரு கண் வைத்திருந்தான்.

ஆகையால் இதுதான் சரியான வாய்ப்பு என கந்தனின் கையிலிருந்து கங்கணத்தைக் கழற்றி எடுத்துக் கொண்டு கந்தனை இருட்டில் நிராதரவாக விட்டுச் சென்று விட்டான்.

தட்டுத் தடுமாறி வீட்டை அடைந்த கந்தனின் கையில் கங்கணம் இல்லாததைக் கண்டு திடுக்கிட்ட ருக்மணி "ஏய் கிழவா? கங்கணத்தை எங்கே தொலைத்தாய்?"என்று சீறினாள். உண்மையாகவே உனக்குத் தங்க வளையல் செய்வதற்காக அதை நமது கிராமத்துக் கொல்லனிடம் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன்!" என்று கந்தன் பொய் சொன்னான். ருக்மணியின் பதற்றம் பெரும் மகிழ்ச்சியாக மாறியது. ஆகையால் அவள் கந்தனுக்கு ராஜஉபசாரம் செய்தாள்.

கங்கணத்தை திருடிய முத்து நேராக கிராமத்துக் கொல்லனை அடைந்து, "இதை விற்றுப் பணமாக்கித் தந்தால்



பாதிப்பணம் உனக்கு! மீதியை எனக்கு நாளைக்குக் கொடு!" என்றான். அதைப் பார்த்தவுடனே, அது கந்தனுடைய கங்கணம் என்றும், முத்து அதைத் திருடிக்கொண்டு வந்திருக்கிறான் என்றும் கொல்லன் புரிந்து கொண்டான். அப்படியே விற்றால் பிடிபடுவோம் என்று அதை அழித்து வளையலாகச் செய்து விற்க நினைத்து, இரவோடு இரவாக அந்த வேலையில் ஈடுபட்டான்.

கொல்லனின் மனைவி மீனாட்சி இரவு வெகு நேரமாகியதால் தன் கணவன் வேலை செய்யுமிடத்திற்கு வந்தாள். திடீரென அவள் வந்ததால், திடுக்கிட்டுப் போன அவன் "உன்னை யார் இங்கு வரச்சொன்னார்கள்? போ வெளியே!" என்று கோபத்துடன் கூச்சலிட்டதைக் கேட்டு மீனாட்சி உடனே சென்று விட்டாள்.

ஆனால் தன் கணவன் ஏதோ திருட்டுப் பொருளை மாற்றி அமைக்கிறான் என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது. மறுநாள் கந்தனின் மருமகள் ருக்மணி கொல்லனைத் தேடி வந்தாள்.


அவன் வெளியில் சென்று இருந்ததால் அவனுடைய மனைவி மீனாட்சியிடம், "என் மாமனார் எனக்காக ஒரு வளையல் செய்யச் சொல்லி இருக்கிறாராம்! அது எந்த வடிவத்தில் இருக்க வேண்டும் என்பதை என்னைக் கேட்டுச் செய்யச் சொல்!" என்று உத்தரவிட்டுப் போனாள்.

கொல்லன் திரும்பி வந்ததும், மீனாட்சி அதைப்பற்றிச் சொல்லவும் அவன் கோபப்பட்டான். இதனால் தன் கணவன் மீதிருந்த சந்தேகம் மீனாட்சிக்கு ஊர்ஜிதம் ஆயிற்று.

ருக்மணி அதற்குள் வீட்டிற்குச் சென்று அனைவர் முன்னிலையிலும் ஒருவிடயமாகக் கொல்லன் வீட்டிற்குச் சென்று வந்ததைப் பற்றிக் கூறினாள். அதைக் கேட்ட கந்தனுக்கும், கங்கணத்தைத் திருடிய முத்துவிற்கும் திருடனைத் தேள் கொட்டியது போலிருந்தது. இருவரும் மௌனம் சாதித்தனர். ருக்மணியின் கணவனுக்கு இதைக் கேட்டு ஆச்சரியம் உண்டாகியது. அதேசமயம், முத்துவின் முகம் மாறியதையும், அவன் அவசரமாக எங்கோ செல்வதையும் கவனித்தான்.

நேராகக் கொல்லனின் வீட்டிற்குச் சென்ற முத்து, "உன்னிடம் நான் கங்கணம் கொடுத்தது, என் அக்கா ருக்மணிக்கு எப்படித் தெரியும்?" என்றதும்,கொல்லன்,"கங்கணமா? ஏது? நீ எப்போது கொடுத்தாய்?" என்று நடித்தான். ரகசியம் வெளியானால் முத்து சிக்குவான் என்று தெரிந்ததும், கொல்லனுக்கு கங்கணத்தை விற்று முழுப்பணத்தையும் தானே அடைய வேண்டுமென்று பேராசை ஏற்பட்டது தான் காரணம். இதைக் கேட்ட முத்து அவனை நன்கு திட்டி விட்டுச் சென்றான்.

நடந்ததை ரகசியமாகப் பார்த்த கொல்லனின் மனைவி மீனாட்சிக்கு ஒரு யோசனை தோன்றியது. தன் வீட்டில் இருந்து சீதனமாக தங்க நகை எதுவும் கொண்டு வராததால் தன்னைத் தன் கணவன் கேவலப்படுத்துவது அவளைப் பல ஆண்டுகளாக உறுத்தியது. அதைத் திருடிக் கொண்டு,



தன் பிறந்த வீட்டில் கொடுத்து தன் பெற்றோர் அதை சீதனமாகக் கொடுப்பது போல் செய்ய வேண்டுமெனப் பார்த்து அதைத் திருடி எடுத்து மறைவிடத்தில் வைத்து விட்டாள்.

வெளியிலிருந்து திரும்பிய கொல்லன் வளையலைக் காணாமல் மனைவியைக் கேட்க, அவள் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதித்துவிட்டாள். ஆனால், அவனுக்குத் தன் மனைவி மீது சந்தேகம் இருந்ததால் அவளுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான்.

முத்து தன்னை ஏமாற்றிய கொல்லனைக் கொலை செய்யத் திட்டமிட்டு இரவு நேரத்தில் அவன் வீட்டை அடைந்தான். அதற்குள், கந்தன் தன் மகன் கோபாலனிடம் கங்கணம் திருட்டுப்போன உண்மையைக் கூற, கோபாலன் முத்துவை சந்தேகப்பட்டு அவனை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தான். அன்றிரவு முத்து வீட்டை விட்டுக் கிளம்பியவுடன்,கோபாலனும் அவனை பின் தொடர்ந்தான்.


அன்றிரவு கொல்லனின் மனைவி மீனாட்சி திருட்டு வளையலை வீட்டில் வைக்காமல் வேறு எங்காவது ஒளித்து வைக்க எண்ணி நடு இரவில் வீட்டை விட்டு வெளியேறினாள். தனது மனைவியை வேவு பார்த்துக் கொண்டிருந்த கொல்லனும் அவளைப் பின்தொடர, கொல்லன் எங்கோ செல்வதைக் கண்ட முத்து அவனைப் பின்தொடர, முத்துவைக் கோபாலன் பின் தொடர்ந்தான். நடு இரவில் நான்கு பேர் செல்வதைக் கண்டு , ஐந்தாவது நபர் ஒருவரும் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

கடைசியில் மீனாட்சி ஒரு பாழடைந்த கோயிலை அடைந்து, அங்கு குழி தோண்டி வளையலைப் புதைக்க முயற்சிக்கையில், கொல்லன் அவளை கையும் களவுமாகப் பிடிக்க, கொல்லனை முத்து பிடிக்க, முத்துவை கோபாலன் பிடிக்க, நால்வரும் காரசாரமாக மோதினர்.

"சண்டையை நிறுத்துங்கள்!" என்ற கூக்குரல் கேட்டு நால்வரும் திரும்ப, அவர்களைப் பின் தொடர்ந்த ஐந்தாவது நபர் தன் வேடத்தைக் கலைத்தார். அவர் வேறு யாருமல்ல! மாறுவேடத்தில் இரவில் சுற்றிக் கொண்டிருந்த அந்த நாட்டு மன்னர்தான் அவர்! மன்னரிடம் முத்துவும், கொல்லனும், மீனாட்சியும் நடந்ததைக் கூறி மன்னிப்புக் கேட்டனர்.

முதன் முதலாக திருடிய முத்துவையும் திருட்டுக்கு உடந்தையாக இருந்த கொல்லனையும் சிறையில் அடைக்க மன்னர் ஏற்பாடு செய்தார்.

கந்தனின் திருட்டுப் போன கங்கணம் வளையலாக மாறி



அவனிடம் வந்து சேர அதை அவன் தன் மருமகளிடம் தந்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வஜன வாக்கெடுப்பாக மாகாண தேர்தலை கருதுக

## அகிலவிராஜ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டங்கள் தவறானது என்பதை வெளிப்படுத்தும் சர்வஜன வாக்கெடுப்பாக எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு இராஜகிரியவில் உள்ள தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களை ஏமாற்றி மக்களுக்கு மூடி மறைத்து செய்யும் இந்த கண்காட்சிகளை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் வந்துள்ளது. ஊழல், மோசடிகள், கொலை, வன்முறை போன்றவற்றை ஊடக கண்காட்சிகள் மூலம் மறைத்து மக்களின் வாக்குகளை கொள்ளையிட அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

இந்த பொய்க்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கும். அரசாங்கத்திற்கு சிறந்த பாடத்தை கற்றுக் கொடுக்க மக்கள் இந்த மாகாண சபைத் தேர்தலை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

# மஸ்ஜிதுல் அரபாமீது பன்றி இறைச்சி வீச்சு

(கொழும்பு)

மஹியங்கனை நகரில் உள்ள முஸ்லிம்களின் வணக்கஸ்தலமான மஸ்ஜிதுல் அரபா மீது இனந்தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரம்ழான் காலத்தில் முஸ்லிம்களின் இரவுக்கால வணக்கமான தராவிஹ் தொழுகை முடிந்த பின் சுமார் இரவு 11.10 மணியளவில் ஐந்து அல்லது ஆறுபேர் கொண்ட குழுவொன்று குறித்த மஹியங்கனை மஸ்ஜிதுல் அரபா மீது கல் வீசியுள்ளனர்.

இதனால் பள்ளிவாசலின் நான்கு ஜன்னல் கண்ணாடிகளும் ஒரு கதவின் கண்ணாடியும் சேதமாகியுள்ளதுடன் பள்ளியின் உட்பகுதிக்குள் பன்றி இறைச்சியையும் வீசியுள்ளனர். பள்ளியின் கழிவறைப் பகுதியும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மஹியங்கனை பொலிஸாரிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தற்பொழுது பொலிஸார் பள்ளிவாசலில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

# மீட்கப்பட்ட தந்தங்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)

சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட ஒரு தொகை தந் தங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு இன்டர்போல் உத்தியோகத்தர்கள் மூவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் கைப்பற்றப்பட்ட தந்தங்களின் DNA மாதிரிகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

யானைத் தந்தங்கள் எந்த நாட்டிற்குக் கடத்தப்படுகின்றன என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை, குறித்த அதிகாரிகள் மூவரும் ஆரம்பித்துள்ளனர்.

கென்யாவில் இருந்து இலங்கை ஊடாக டுபாய்க்கு கொண்டு செல்லப்படவிருந்த தந்தங்கள் அடங்கிய கொள்கலன் அண்மையில் சுங்கப் பிரிவினால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தனியார் பேருந்து கட்டணம் அதிகரிக்கப்படாது?-ரத்னாயக்க

(கொழும்பு)

தனியார் பேருந்து கட்டணங்கள் தற்போதைக்கு அதிகரிக்கப்பட மாட்டாது என்று தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரியே கடந்த மாதமும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அதேவேளை நேற்று முன்தினம் நடத்தப்பட்ட போராட்டம் வெற்றியளிக்கவில்லை.

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் 10 வீத கட்டண அதிகரிப்பை கோரி நிற்கின்றது. எனினும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 8 வீதம் தொடக்கம் 10 வீதம் வரையிலேயே கட்டண அதிகரிப்பை வழங்குவதற்கு முன்மொழிந்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)




✷ 1174 - ஸ்கொட்லாந்தின் முதலாம் வில்லியம் லண்டனின் இரண்டாம் ஹென்றியின் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

✷ 1643 - லண்டன் உள்நாட்டுப் போர்: லண்டனின் ஹென்றி வில்மட் பிரபுவின் முடியாட்சி சார்புப் படைகள் சேர் வில்லியம் வோலர் தலைமையிலான நாடாளுமன்ற சார்புப் படைகளைத் தோற்கடித்தனர்.

✷ 1793-பிரெஞ்சு எழுத்தாளரும் புரட்சிவாதியுமான ஜான் போல்மராட் அவரது குளியல் அறையில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

✷ 1844 - இலங்கையில் பொலிஸ் நீதிமன்றங்கள் (police courts) அமைக்கப்பட்டன.

✷ 1869 -இந்துப் பிள்ளைகளின் கல்விக்கு ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார்.

✷ 1908 -லண்டனில் இடம்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்களில் முதன்முதலாகப் பெண்கள் பங்குபற்றினர்.

✷ 1878-பெர்லின் உடன்படிக்கை: சேர்பியா, மொண்டெனேகுரோ, ருமேனியா ஆகிய நாடுகள் ஒட்டோமான் பேரரசில் இருந்து முழுவதுமாக விடுதலை பெற்றன.

✷ 1923 - லொஸ் ஏஞ்சலீசில் ஹொலிவுட்டின் மேல் உள்ள மலையில் ஹொலிவுட் குறியீடு" அதிகாரபூர்வமாக எழுதப்பட்டது. ஆரம்பத்தில் இது ஹொலிவுட்லாந்து என எழுதப்பட்டாலும் பின்னர் 1949 இல் தற்போதைய பெயருக்கு மாற்றப்பட்டது.

✷ 1930 -முதலாவது உலகக் கோப்பை காற்பந்தாட்டப் போட்டிகள் உருகுவேயில் ஆரம்பமாகின. லூசியென் லோரெண்ட் பிரான்சுக்காக மெக்சிகோவுக்கு எதிராக முதலாவது கோலைப் போட்டார்.

✷ 1931 - காஷ்மீர், ஸ்ரீநகரில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 75 பேர் உயிரிழுந்தனர்.

✷ 1941 - இரண்டாம் உலகப் போர்: மொண்நீக் குரோ மக்கள் அச்சு நாடுகளுக்கு எதிராகக் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

✷ 1971 - மொரோக்கோவில் தோல்வியடைந்த இராணுவப் புரட்சியில் ஈடுபட்ட பத்து இராணுவத்தினர் தூக்கிலிடப்பட்டனர்.

✷ 1977 - மின்சார இழப்பினால் நியூயோர்க் நகரம் 25 மணி நேரம் இருளில் மூழ்கியதில் பல கொள்ளைச் சம்பவங்களும் பல்வேறு சமூக விரோத நிகழ்வுகளும் இடம்பெற்றன.

✷ 1989 - இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

✷ 1997 - சே குவேராவினதும் தோழர்களதும் உடல் எச்சங்கள் கியூபாவுக்குக் கொண்டு வரப்பட்டன.

✷ 2001 - சீனாவின் பீஜிங் நகரம் 2008க்கான ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்குத் தகுதி பெற்றது.

### பிறப்புகள்

✷ 1841 - ஓட்டோ வாக்னர், ஆஸ்திரியக் கட்டடக் கலைஞர் (இ. 1918)

✷ 1934 - வோல் சொயிங்கா, நோபல் பரிசு பெற்ற நைஜீரிய எழுத்தாளர்.


✷ **1953 - வைரமுத்து, தமிழ்த் திரைப்பட பாடலாசிரியர், கவிஞர்.**

### இறப்புகள்

✷ 1974 - பட்றிக் பிளாக்கெட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1891)

✷ 1989 - அ. அமிர்தலிங்கம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் (பி. 1927)

### கவிப்பேரரசு வைரமுத்து



வைரமுத்து 1953ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் திகதி தமிழ் நாடு மாநிலம் தேனி மாவட்டம், பெரியகுளம் அருகில் உள்ள வடுகபட்டியில் ராமசாமி - அங்கம்மாள் ஆகியோருக்கு மகனாக விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். புகழ் பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞருமான இவர் சிறந்த பாடலாசிரியருக்கான இந்திய அரசின் விருதை ஆறுமுறை பெற்றுள்ளார். 1980ஆம் ஆண்டில் நிழல்கள் எனும் திரைப்படத்தில் "பொன்மாலைப் பொழுது" எனும் பாடலை முதன்முதலில் எழுதிய இவர் ஜனவரி 2009 வரை 5800 பாடல்களை எழுதியுள்ளார். முன்பு இளையராஜாவுடனும், பின்னர் ஏ.ஆர்.ரஹ்மானுடனும் இவர் இணைந்து வழங்கிய பாடல்கள் புகழையும் பல விருதுகளையும் பெற்றுள்ளன.

இவருடைய மனைவியின் பெயர் பொன்மணி. இவருக்கு இரு மகன்கள்,பெயர்கள் மதன் கார்க்கி, கபிலன்.

இவரது கவிதைத் தொகுப்புகளாக வைகறை மேகங்கள், சிகரங்களை நோக்கி, திருத்தி எழுதிய சிற்பியே உன்னைச் செதுக்குகிறேன், இதனால் சகலமானவர்களுக்கும், இதுவரை நான், கொஞ்சம் தேனீர் நிறைய வானம், பெய்யென பெய்யும் மழை, நேற்று போட்ட கோலம், ஒரு போர்க்களமும் இரண்டு பூக்களும், ஒரு மௌனத்தின் சப்தங்கள், எருமை மாடு, குமுட்டை, 9எ ஆகியனவும் நாவல்களாக தண்ணீர் தேசம், கள்ளிக்காட்டு இதிகாசம் கருவாச்சி காவியம், 'மூன்றாம் உலகப்போர் ஆகியனவும் வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள பெருந்தேசியவாதம், சர்வதேச மேலாதிக்கத்தின் மௌனம் கலையுமா?



13-வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து, இந்தியாவின் கருத்தினை செவிமடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அதனை இந்தியா புரிந்துகொள்ளுமென்றும், இலங்கையின் பாதுகாப்புச் செயலாளரும், ஜனாதிபதியின் தம்பியுமான கோத்தபாய ராஜபக்ஷ தெளிவாகக் கூறுவதை இந்தியா கவனத்தில் கொள்ளாவிட்டாலும்...

...அவர் என்ன சொல்ல வருகிறார் என்று, தமிழர் தரப்போடு அடிக்கடி உரையாடும் அமைச்சர் சுதர்சன நாச்சியப்பனுக்குப் புரியும்.

உள்நாட்டில் உருவாக்கப்படும் தீர்வு குறித்தே தாம் அக்கறை கொள்வதாக, கோத்தபாய ராஜபக்ஷ முதல் நிமால் சிறிபால டி சில்வா வரை ஒருமித்த குரலில் பாடுவதை, விரைவில் இலங்கை வரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கவனத்தில் கொள்வாரென்று சிலர் நம்பலாம்.

கடந்த நான்கு ஆண்டுகளாக வடக்கில் நடைபெறும் இராணுவ மயமாக்கல், தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம், சிங்கள மயமாதல் மற்றும் பௌத்தமயமாதல் போன்றவற்றின் ஊடாக, உள்நாட்டுத் தீர்வினை கண்டடையலாமென்று அரசு செயற்படும் போது, அதனைக் கண்டும் காணாதது போல, பேர்லினிலும் டெல்லியிலும் கூட்டங்களை நடாத்துவது பொருத்தமற்றது போலவே தெரிகிறது. இந்த வல்லரசுகளுக்குத் தெரியாத, புரியாத விடயங்களை நாம் தெளிவுபடுத்துகிறோம்; இராஜதந்திர மௌனத்தை கலைக்கப் போகிறோம்; என்று முயற்சிகளை மேற்கொள்ளும், தேச நலனில் அக்கறை கொண்டவர்கள்- எல்லாவற்றையும் தெரிந்தவர்களோடு தான், தாம், பேசுகிறோம் என்பதை மறந்துவிடுகிறார்கள்.

தமிழர் தரப்புகளின் டெல்லிப் பயணம்போன்று, தென்னிலங்கைத் தரப்பும் தமது நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்த டெல்லிக்குச் செல்கின்றது.

அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் பின்னாலுள்ள் காய்நகர்த்தல்களை நோக்கினால், இந்திய அழைப்பின் காரணங்களைப் புரிந்துகொள்ளலாம்.

13-இல் கைவைப்பது, இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட, இந்திய பிராந்திய பாதுகாப்பு நலனிற்கு அச்சுறுத்தலாக அமையாது என்கிற வகையில் பசில்ராஜபக்ஷவின் விளக்கங்கள் இருக்குமென எதிர்பார்க்கலாம்.

அத்தோடு, மத்தியில் குவிந்துள்ள அதிகாரத்தை, எந்தவொரு மாகாணத்திலும் சிறிதளவேனும் இழப்பதை சிங்கள தேசம் விரும்பவில்லை என்பதோடு, அகில இலங்கை பௌத்த காங்கிரசும், பௌத்த உயர் பீடங்களும் இந்த 13-வது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பதில் திடமாக இருக்கிறார்கள் என்ற செய்தியையும் இந்தியாவிற்கு பசில் ராஜபக்ஷ முன்வைப்பார்.

13-வது திருத்தச் சட்டம் குறித்து தென்னிலங்கையிலுள்ள ஆளும் தரப்பிற்குள் ஏற்பட்டுள்ள பிணக்குகளைப் பார்த்தால், எதிர்ப்பரசியலுக்குள் ஒரு எதிர்ப்பரசியல் முளைத்திருக்கும் விந்தையைக் காணலாம். வடக்கில் முன்னெடுக்கப்படும் இராணுவ நிர்வாகம் மற்றும் நில அபகரிப்பு குறித்து உள்ளுக்குள் முரண்படாத ஆளும் இடதுசாரித் தரப்பினர், இந்த 13-வது திருத்தச் சட்ட விவகாரத்தில் மட்டும் போர்க்கொடி தூக்குவதன் மர்மம் என்ன?

சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து, சிறிலங்கா சுந்திரக் கட்சியின் வாக்கு வங்கிப் பலத்தால் எம்.பி. பதவியைப் பெற்ற இடதுசாரிகள் என்று சொல்லப்படுபவர்கள், 13-வது திருத்தச்சட்ட விவகாரத்தில் முரண்டு பிடிப்பதால் எத்தகைய மாற்றங்களை ஆளும் தரப்பிற்குள் உருவாக்க முடியும் என்கின்ற கேள்வி எழுகிறது.

விடுதலைப் புலிகளை போரில் வென்ற பலத்தை வைத்து, சிங்கள பெருந்தேசியவாதத்தின் மிகப் பெரிய ஆதரவினைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்சவின் அதிகார பீடத்தில், சிறுஅசைவையும் அவர்களால் ஏற்படுத்த முடியுமா?

இருப்பினும், இடதுசாரிகளுடன் ஆளும் தரப்பினர் உருவாக்கும் முரண் நிலைப்போக்கும், அதனால், ஏற்படும் பிரிவுகளும், மேற்குலகிற்கு எதிரான, இடதுசாரிகளின் பால் நாட்டம் கொண்ட சில சர்வதேச நாடுகளின் ஆதர வினை இலங்கை இழக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கலாம்.

குறிப்பாக கியூபா, வெனிசுவேலா போன்ற நாடுகளின் இலங்கை குறித்தான பார்வையில், இடதுசாரிகளின் வெளியேற்றம் மாற்றத்தை ஏற்படுத்துமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஆளும் கட்சிக்குள் உருவான எதிர்ப்பரசியல், தென்னிலங்கை ஊடாக வெளியில் விவாதப் பொருளாக மாறியுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கம் பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நிதி மற்றும் தேர்தல் விவகாரங்களைக் கையாளப் போகும் இக்குழு தேசிய அரசியல், சர்வதேச அரசியல் குறித்தான விடயங்களை விவாதித்து முடிவெடுக்கும் வல்லமையைக் கொண்டிருக்குமா என்பதை அவதானிக்க வேண்டும்.

அரசியல் தீர்வு, சர்வதேச உறவு குறித்து, மிகவும் காத்திரமான, தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டிய அவசியம், இன்றைய சூழலில் அதிகமாக இருப்பது உணரப்படுகிறது.

இலங்கை குறித்து, இந்தியா எத்தகைய இராஜதந்திர அணுகுமுறையைக் கையாள்கிறது என்பதனை, ஆழமாகப் புரிந்து கொள்வதும், இந்திய உபகண்டத்தில் தமது நலனிற்கு ஏற்றவாறு மூலோபாயச் சமநிலையை மாற்றியமைக்க, சீனாவும், அமெரிக்காவும் எவ்வாறு தேசிய இனப்பிரச்சினையை பயன்படுத்த முனைகின்றன என்பதோடு, அதிலுள்ள நுண்ணரசியலை அறிந்து, அதற்கேற்றவாறு அரசியல் வேலைத் திட்டங்களை வகுத்துக் கொள்வது அவசியமானதாகக் காணப்படுகிறது.

சீனாவின் முதலீட்டு ஆதிக்கம் தணிவடையும் வரை, இலங்கை அரசுடனான உறவினைப் பலப்படுத்தும் முயற்சியை இந்தியா கைவிடாது. அதுமட்டுமல்லாது, இலங்கை அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கு தேசிய இனப் பிரச்சினையில் தவிர்க்க முடியாத பங்காளியாக இருக்கும் நிலையையும் இழந்துவிட இந்தயா விரும்பாது.

ஆகவே, அரசியல் தீர்வு விடயத்தில், தமிழ்மக்களது அடிப்படை உரிமைகளை வலியுறுத்தும் வகையில், இந்தியாவுடன் பேசுவோர் பேசமுடியும்; இந்தியாவுடன், இணக்கப்பாட்டு அரசியல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

இயக்கங்களை வளர்த்து இந்தியா -இலங்கை ஒப்பந்தம் பெறப்பட்டது. ஆனால், விடுதலைப் புலிகளை அழிக்க உதவியபோதும், சீபா ஒப்பந்தத்தை இந்தியாவால் நிறைவேற்ற முடியவில்லை.

எமது பலம் எதிராளியின் பலவீனம் என்பதன் மறுதலையாக, இந்தியாவின் தேவையை இலங்கை அரசு பயன்படுத்தும் போது, தமிழர் தரப்பால் ஏன் பயன்படுத்த முடியாது?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட சர்வதேச அரசியல் பார்வை குறித்த நிலைப்பாட்டின் அர்த்தங்கள் புரிந்துகொள்ளப்பட வேண்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

-இதயச்சந்திரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தவேண்டியேற்படும்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



(கொழும்பு)

**13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக நியமிக் கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு ஊடாக பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டால் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றுக்கும் செல்ல நேரிடும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், ஜனநாயக முறையின் அடிப்படை சந்தர்ப்பமான தெரிவுக்குழுவில் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் என்ன திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்ற போதிலும் தெரிவுக்குழு முதற் தடவையாக கடந்த 9 ஆம் திகதி கூடியது. ஆனாலும் அதில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு குறித்து கருத்துக்கள் இன்னும் முன்வைக்கப்படவில்லை.

13 ஆவது அரசியல் திருத்தம் தொடர்பாக பொது இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு மிகவும் சிறந்த மேடை என ஜனாதிபதி இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் நடைபெற்ற சந்திப்பின் போது கூறியுள்ளார். இதனை இந்தியா வரவேற்று பாராட்டியுள்ளது. தெரிவுக்குழுவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் கலந்து கொள்ள வேண்டும் என இந்தியா அழைப்பு விடுத்துள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (அ-2)

## முகாமைத்துவ உதவியாளர்களுக்கு கொழும்பில் நேர்முகப்பரீட்சை

(கொழும்பு)

அரசாங்க முகாமைத்துவ இணைந்த சேவையில் 2 ஆயிரத்து 825 பேரை நியமனம் செய்வதற்கான நேர்முகப்பரீட்சை கொழும்பில் ஆரம்பமானது.

கொழும்பு 7 இல் உள்ள பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நேற்று முன்தினம் ஆரம்பமான மேற்படி நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்தில் ஜனவரி மாதத்தில் அரசாங்க முகாமைத்துவ இணைந்த சேவைகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை நடைபெற்றது. இந்தப் போட்டிப் பரீட்சையில் சுமார் 70 ஆயிரம் பேர் நாடளாவிய ரீதியிலிருந்து தோற்றினர்.

இவர்களில் தகைமையானோர் புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுத்து நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தி அவர்களிலிருந்து 2 ஆயிரத்து 825 பேர் அரசாங்க முகாமைத்துவ இணைந்த சேவைகளுக்கு இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மேற்படி சேவையின் தரம் IIIஇற்கும் நியமித்துக் கொள்ளப்படுவர்.

நாடளாவிய ரீதியில் அரச முகாமைத்துவ இணைந்த சேவைகள் பிரிவுகளில் வெற்றிடங்கள் நிலவுகின்றன. அவற்றைக் கட்டம் கட்டமாக நிரப்பும் வகையிலேயே இம்முறை 2 ஆயிரத்து 825 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நான்கு தேசிய பாடசாலைகள்

வடபகுதி அரசியல்வாதிகளின் கோரிக்கைக்கு இணங்க கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள நான்கு பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறு கையில்,

1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் அரசின் திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள நான்கு பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வடபகுதி தமிழ் அரசியல்வாதிகள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

## மக்களின் வாக்குரிமையை பாதுகாக்க சர்வதேச கண்காணிப்பு வேண்டும்

### பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களையும் கண்காணிப்பதற்கு ஐ.நா.கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் தற்போது நிர்வாகத்திலுள்ள அரசாங்கம் மக்களின் வாக்குகளை எவ்வாறேனும் கொள்ளையடிக்க முயற்சிக்கும். எனவே, மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க வேண்டுமாயின் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவசியம். குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை கண்காணிப்பாளர்கள் பிரசன்னமாக வேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வாக்கு எண்ணும் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியமை, வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளைப் பலாத்காரமாக வெளியேற்றியமை போன்ற கீழ்த்தரமான நடவடிக்கைகளில் இந்த அரசாங்கம் ஈடுபட்டிருந்தது.

இந்த அராஜக நிலையே செப்டெம்பரில் நடைபெறவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் தொடரும். ஆகவே, இவ்வாறான மோசடிகளைத் தடுக்கும் வகையில் ஐ.நாவின் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## மஹிந்தவை சந்தித்தார் ஹிருணிகா

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ஏற்பாட்டில் நேற்று காலை அலரி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின் போது ஹிருணிகாவின் எதிர்கால திட்டங்கள் குறித்த ஜனாதிபதி விசாரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## பிரிட்டன் பிரஜைக்கு அபராதம் விதிப்பு

விடுதி கட்டணத்தை செலுத்தாத பிரித்தானிய பிரஜையை நாடுகடத்துமாறு உத்தரவிட்டுள்ள நீதிமன்றம் அவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துள்ளது.


காலாவதியான விசாவுடன் நாட்டில் தங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே அவரை நாடு கடத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார். (அ-2)




ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று வங்கி ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுடனான வர்த்தக உறவு மேலும் வலுவடையும்-ஆனந்த்சர்மா



அமெரிக்காவுடனான வர்த்தக உறவு மேலும் வலுவடையும் என மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் ஆனந்த்சர்மா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) மற்றும் இந்திய-அமெரிக்க வர்த்தக கவுன்சில் சார்பில் நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

இந்தியாவை சர்வதேச அளவிலான உற்பத்தி மையமாக்குவதற்கு மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது. அதற்கேற்ப உற்பத்தித் துறையில் அந்நிய முதலீட்டை ஈர்ப்பதற்காக பல்வேறு கொள்கைகளை வகுத்து வருகிறது.

இரு நாடுகளும் இணைந்து செயற்பட்டு வரும் அறிவியல் மற்றும தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் வலுவடைந்துள்ளது.

விமானப் போக்குவரத்து, அணு சக்தி, பாதுகாப்பு, வேளாண்மை, தகவல் தொழில்நுட்பம், தொலைத் தொடர்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு வர்த்தக உறவு மேலும் வலுவடையும்.

அதேபோல, இருதரப்பு பரஸ்பர முதலீடும் கணிசமாக அதிகரித்து வருகிறது. அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் ரூ.1.92 இலட்சம் கோடியையும், இந்திய நிறுவனங்கள் அமெரிக்காவில் ரூ.78 ஆயிரம் கோடியையும் முதலீடு செய்துள்ளன.


அந்நிய முதலீட்டை ஊக்குவிக்கும வகையில், தேசிய முதலீட்டு, உற்பத்தி மண்டலங்கள் மற்றும் முதலீட்டுக்கான ஒற்றைச் சாளர ஒப்புதல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மிகப்பெரிய உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு விரைவாக ஒப்புதல் அளித்து செயற்படுத்துவதற்கு வசதியாக பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் முதலீட்டுக்கான மத்திய அமைச்சரவைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு இந்தியாவுக்கு கடினமானதாக அமைந்தது.

எனினும், இந்தியாவின் பொருளகளுக்கான தேவை, முதலீடு (35%), சேமிப்பு (31%) ஆகியவை வலிமையாக உள்ளன. இதனால் பொருளாதார வளர்ச்சி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பும் என்றார்.(அ-2)

# கடலுக்கடியில் சுரங்கம் அமைக்க சீனா திட்டம்



கடலுக்கடியில் உலகின் மிக நீளமான சுரங்கப்பாதையை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.சீனாவின் கிழக்கு மற்றும் வடக்கு பிராந்தியங்களை இணைக்கும் போகாய் ஜல சந்தியின் கடலுக்கு அடியிலேயே இந்த சுரங்கப்பாதை அமைக்கப்படவுள்ளது.

சுமார் 10 பில்லியன் டொலர் செலவில் நிறைவேற்றப்படும் என்று கடந்த 1994 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் பணிகளை 2010 இல் முடிவுக்குக் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.ஆனால், 20 ஆண்டுகள் கடந்த நிலையிலும் திட்டம் ஆரம்ப நிலையிலேயே இருப்பதால் விரைவில் நிறைவேற்றுவதற்காக 42 பில்லியன் டொலர் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

வடக்கு பிராந்தியத்திலுள்ள துறைமுக நகரமான தலிபானில் தொடங்கி கிழக்கில் உள்ள யான்டாய் நகரில் இப்பாதை முடிவடைகிறது.

இதன் பணிகள் எப்போது முடிவடையும் என்ற தகவல் வெளியாகவில்லை. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு போக்குவரத்திற்கு திறந்து விட்டால் வரும் வருமானத்தைக் கொண்டு 12 ஆண்டுகளில் திட்டத்திற்காக செலவிட்ட தொகையை ஈடுசெய்ய முடியும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மனித உரிமைசபை உறுப்பினர் பதவிக்கு ஈரான்,சிரியா போட்டி

## மனிதவுரிமை கண்காணிப்பு அமைப்பு எதிர்ப்பு

ஐ.நா.சபையின் மனித உரிமை கவுன்சில் உறுப்பினர் பதவிக்கு ஈரான், சிரியா போட்டியிட முடிவு செய்துள்ளன. இதற்கு கண்காணிப்பு அமைப்பு நிபுணர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஜெனீவாவை தலைமையகமாக கொண்டு ஐ.நா. மனித உரிமை கவுன்சில் செயற்படுகிறது. அதில் 14 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் நியூயோர்க் நகரில் நடைபெற இருக்கிறது. இதில் தேர்நதெடுக் கப்படும் உறுப்பினர் 2014 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 3 ஆண்டுகள் பதவியில் இருப்பாரகள்.

இதில் 4 உறுப்பினர்கள் ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள்.

இந்த 4 உறுப்பினர் பதவிக்கு சீனா, ஈரான், ஜோர்தான், மாலைதீவு, சவுதி அரேபியா, சிரியா, வியட்நாம் ஆகிய 7 நாடுகள் மோதுகின்றன. இந்த தகவலை ஐ.நா. சபை தூதர் வெளியிட்டார்.

நியூயோர்க் நகரிலுள்ள ஈரான், சிரியா தூதர்கள் இதுபற்றி கருத்து கூறவல்லை. கடந்த 2011ஆம் ஆண்டிலும் சிரியா போட்டியிட முயற்சி செய்து, அரபு நாடுகளின் எதிர்ப்பை அடுதது கடைசியில் வாபஸ் பெற்றது.

தற்போது மனித உரிமை கவுன்சில் உறுப்பினர் தேர்தலில் ஈரானும், சிரியாவும் களம் இறங்க இருப்பது மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் கண்காணிப்பு அமைப்பு நிபுணர்களை கவலை அடைய வைத்துள்ளது. ஏனென்றால் சிரியாவில் நடைபெறும் கிளர்ச்சியில் சுமார் ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டதாக ஐ.நா.சபையே உறுதி செய்திருக்கிறது.

இதுபற்றி தூதர் ஒருவர் கூறுகையில், 'இந்த 2 நாடுகளும் போட்டியிடுவதை ஏனைய நாடுகள் அனுமதிக்காது' என நம்பிக்கை தெரிவித்தார். இன்னொருவர் கூறுகையில், இந்த தேர்தல் தமாசக உள்ளது என்றார். ஜெனீவாவை சேர்ந்த ஐ.நா. கண்காணிப்பு குழு ஆலோசகர் ஹில்லேல் நெவூர் க்ருத்து கூறுகையில், 'சொந்த நாட்டு மக்களையே கொன்று, சித்திரவதை செய்கிற நாடுகளை எப்படி உலக மனித உரிமை நீதிபதிகளாக்க இயலும். ஆகவே இந்த நாடுகளின் வேட்பாளருக்கு எதிராக நாங்கள் போராடுவோம்' என்று தெரிவித்தார்.

இதற்கு முன்பு தேர்தலில் பெலாரஸ், இலங்கை, அஜெர்பைஜான் ஆகிய நாடுகளுக்கு எதிராக பிரசாரம் மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றனர். அதுபோல தற்போது ஈரான், சிரியாவை எதிர்க்க வியூகம் வகுக்க ஆரம்பித்து விட்டார்கள். (அ-2)

# கொள்ளையிட சென்ற வீட்டில் தன்னை மறந்து உறங்கிய திருடன்



அமெரிக்காவில் வீடொன்றில்கொள்ளையிடச் சென்ற நபரொருவர் கொள்ளையிட்டபின் அதேவீட்டில் அயர்ந்து உறங்கி வசமாக சிக்கிக் கொண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோசடி நபரும் அவரது சகாவும் சேர்க்கினிலுள்ள வீடொன்றில் அதிகாலை வேளை யில் திருடுவதற்காக நுழைந்துள்ளனர்.

அந்த வீட்டிலிருந்து நகைகளைத் திருடிய நபர் சற்று ஓய்வெடுப்பதற்காக நாற்காலியொன்றில் அமர்ந்துள்ளார். நாள் முழுவதும் கடுமையாக பணியாற்றியமையால் களைப்படைந்திருந்த அவர் கதிரையில் உட்கார்ந்ததும் தன்னை மறந்து உறங்கிவிட்டார்.

அங்கிருந்த தொலைக்காட்சிப் பெட்டியொன்றை களவாடிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்த மற்றையவர் இவரை எழுப்புவதற்கு மறந்து தொலைக்காட்சிப் பெட்டியுடன் அந்த வீட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

இந்நிலையில் வீட்டின் உரிமையாளர் வீட்டின் வரவேற்பறைக்குள் பிரவேசித்த போது அங்கு அறிமுகமற்ற இளைஞன் ஒருவன் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவரை கைது செய்ததுடன் அவர் வழங்கிய தகவல்களின் பிரகாரம் அவரது சகாவையும் கைது செய்தனர். (அ-2)

# இந்தோவில் சிறைக் கலவரம்; 150 கைதிகள் தப்பியோட்டம்




இந்தோனேசிய சிறைக் கலவரத்தில் 150 கைதிகள் தப்பியோடியுள்ளனர். இந்தோனேசியா சுமத்திராதீவு மேதன் நகரில் உள்ள டேன்ஜங்கஸ்டவ் சிறைச்சாலையில் சுமார் 2 ஆயிரத்து 400 கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். 400 பேர் அடைத்து வைக்கப்பட வேண்டிய இடத்தில் அதிகளவான பேரை அடைத்து வைத்ததால் அவர்களிடையே நேற்று முன்தினம் கலவரம் மூண்டது.

இதில் சிறைச்சாலைகள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. மின்சாரம் தடைப்பட்டதால் தண்ணீர் தட்டுப்பாடும் ஏற்பட்டது. இதனால் கட்டுப்படுத்த முடியாத தீ பல இடங்களுக்கும் பரவியது. அப்போது கைதிகள் அங்கிருந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சிறைஅதிகாரிகளை சிறை வைத்தனர்.

பின்னர் சிறையை உடைத்து கொண்டு அங்கிருந்து 150 கைதிகள் தப்பியோடி விட்டனர். இதில் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டோரும் தப்பித்து சென்றுவிட்டனர்.

பின்னர் நூற்றுக்கணக்கான பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு வரவழைக்கப்பட்டுநிலைமையை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர். (அ-2)

# அந்நிய முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழல் ஏற்படுத்தப்படும்

## ப.சிதம்பரம் உறுதியளிப்பு

இந்தியாவில் அந்நிய முதலீட்டாளர்கள் வர்த்தகம் செய்வதற்கு ஏற்ற சூழல் ஏற்படுத்தப்படும் என மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் உறுதி அளித்துள்ளார்.

அந்நிய முதலீட்டை ஈர்க்கும் வகையில் அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிதமம்பரம், அந்நாட்டு முன்னணி தொழிலதிபாகளிடம் இவ்வாறு கூறியுள்ளார்.

மைக்ரோசொப்ட், லாக்ஹீட் மார்ட்டின், போயிங் மற்றும் ஜஎல் எப்சி உள்ளிட்ட நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் வியாழக்கிழமை சிதம்பரம் கலந்துரையாடினார்.

அப்போது சிதம்பரம் அவரிடம் கூறியதாவது:

இந்தியாவில் வர்த்தகம் செய்வதற்கு உகந்த சூழல் இல்லை என அந்நிய முதலீட்டாளர்கள் மத்தியில் பரவலான கருத்து நிலவுகிறது. அதேநேரம், பொருளாதார வளர்ச்சி மற்றும் உலக வர்த்தக ஒப்பந்தத்துக்கு இணக்கமானகொள்கைகளை இந்திய அரசு வகுத்து வருகிறது என்பதை உணர வேண்டும்.

அந்நிய முதலீட்டாளர்கள் இந்தியாவில் வர்த்தகம் செய்வதற்கு ஏதுவாக, நேர்மையான, வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற வகையில் முதலீட்டுக்கான சூழல் ஏற்படுத்தித் தர இந்திய அரசு உறுதி பூண்டுள்ளது.

பாதுகாப்பு, சில்லறை வர்த்தகம் மறறும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அந்நிய முதலீட்டுக்கான உச்ச வரம்பை அதிகரிக்க வேண்டும் என அரவிந்த் மாயாராம் தலைமையிலான குழு பரிந்துரை செய்துள்ளது.

இதைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமெரிக்க அரசு கொண்டுவர உள்ள ஒருங்கிணைந்த குடியேற்ற சீர்திருத்த மசோதாவில் இந்தியர்களுக்கு பாதகமாக உள்ள சில அம்சங்கள் குறித்தும் சிதம்பரம் சுட்டிக் காட்டியுள்ளார்.

அமெரிக்காவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி தலைவர் பிரெட்



ஹோக்பெர்க் மற்றும் மூத்த அதிகாரிகள் சிலரையும் சிதம்பரம் சந்தித்துப் பேசினார்.

இந்தப் பயணத்தின்போது, அமெரிக்க-இந்திய வர்த்தக கவுன்சிலின் வருடாந்த உச்சி மாநாட்டில் பங்கேற்க உள்ள சிதம்பரம், அந்நாட்டு நிதி அமைச்சர் ஜேக் லியூவையும் சந்தித்துப் பேச உளளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு முன் எப்போதும் இல்லாத வகையில் கடந்த வாரம் ரூ.61.21 ஆக சரிந்திருந்த நிலையில் சிதம்பரம் அமெரிக்கா சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L 2014-2015

பௌதிகவியல், இணைந்த கணிதம்
ஆங்கிலம்/ தமிழ்

தனிப்பட்ட முறையில் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும் (30 வருட வினாத்தாள் உட்பட) பிரபல கல்லூரிகளில் மேற்படி பாடங்களை கற்பித்து சிறந்த பெறுபேறுகளை பெற்ற ஆங்கில மொழி மூல பட்டதாரி ஆசிரியர்.

தொடர்பு -0775178727,0776648751

**ஆசிரியர்**


**ஆர்.பாலசுப்பிரமணியம் B.Sc (cey) PGDE,42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி (கடையிற் சுவாமியார் வீதிக்கு முன்) யாழ்ப்பாணம்.** (3311)

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**
T.P : 021 321 0815, 021 567 1540

## அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபைக்கு சொந்தமான பழைய தலைமைப் பணிமனை மண்டபம் (பஸ் நிலையம் முன்பாக) வாடகைக்கு விடப்படவுள்ளது. வாடகைக்கு பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் தலைமைப் பணிமனைக்கு நேரில் வந்தோ அல்லது 02120 50348 இலக்க தொலைபேசி மூலமோ விபரங்களை விசாரிக்கலாம்.

**திரு.சிற்றம்பலம் துரைராஜா,**
**தவிசாளர், சாவகச்சேரி**
**பிரதேசசபை, கொடிகாமம்.**
(சி/3985)

*02.06.2013* இல் சமுர்த்தி உத்தியோகத்தருக்கான நியமனத்தை எமக்கு பெற்றுத்தந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்

### திரு.அங்கஜன் - இராமநாதனையும்

அலுவலக இணைப்பாளர் **உதயசீலன்** அவர்களையும்

காலம் எமக்களித்த கனிவு - இவர்
ஞாலம் போற்றும் பேரறிவாளர்
நீளம் கொண்ட நதிபோல எமக்கு நீவீர்
வாழ வழி செய்த வள்ளல் தானே

எம் வாழ்விற்கு ஒளியேற்றி வைத்த வீரர்
அன்போடு எமை தாங்கும் அருமை அண்ணன்
எப்போதும் இருமையின்றி இருந்திடுவீர் எம்மோடு
இரண்டறத்தான் கலந்து நிற்போம் உம் அன்போடு

வாழ்கவென வாழ்த்துவதோடு அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**எஸ்.கார்த்திகேயன், எம்.சதீஸ், ஜி.தினேஸ்**
**பி.தயாளன், ரி.சுஜீவன்**

**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்**
**கரவெட்டி.**

(சி-3987)

## Hatton National Bank

## அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய கிளைகளில் 31.05.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 15.07.2013 தொடக்கம் 18.07.2013 (திங்கள்– வியாழன்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 06.00 வரை இல.212, 214 , ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

❖ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி காலாவதி திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல் விற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி/3969) **ஹற்றன் நஷனல் வங்கி.**

## இந்தியத் திருத்தல யாத்திரை

நாட்கள்: 18+02 யாத்திரிகர்கள்: 10 ஆரம்பம் 05.09.2013
நிறைவு: 25.09.2013

மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர், திருப்பதி, ஆறுபடை வீடுகள், மாங்காடு, வேற்காடு புவனேஸ்வரி, காஞ்சி காமாட்சி, காஞ்சி வரதர், பஞ்சபூதத் திருத்தலங்கள், 9 நவக்கிரக ஆலயங்கள், வேளாங்கண்ணி, அஷ்டலெட்சுமி, அலமேலுமங்கா, சீரடிபாபா சென்னை, திருநாரையூர், சரஸ்வதி கோவில், வலஞ்சுழி விநாயகர், திருக்கடையூர் அபிராமி, சக்தி அம்மன் கோவில், மீனாட்சி சுந்தரேஸ்வரர், இராமேஸ்வரம் சோட்டாணிக்கரை, கொடுங்களூர், குருவாயூர், பொற்கோவில், தோணியப்பர், சிதம்பரம், சீர்காழி, மருத்தீஸ்வரர், பட்டீஸ்வரம் துர்க்கா, சுசீந்திரம் ஆஞ்சநேயர், கன்னியாகுமரி, கபாலீஸ்வரம், காளகஸ்திரி, பார்த்தசாரதி, குபோலிங்கேஸ்வரர், உத்திரகோச மங்கை, திருப்புவானி, நவபாஷாணம், சுசீந்திரம் திருக்கோவில், வனத்திருப்பதி, உவரிசிவன், தாராசுரம்சிவன், ஊட்டி, பாண்டிச்சேரி, மெரீனா பீச்சும் காணலாம், ரிஷி வந்தியம் பாகம் பிரியாள் அம்மன் தரிசிக்கலாம்.

**தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை...**

இருவழி விமான ரிக்கெட், ஏயார் போட் செல்லவும் திரும்ப வரவும் வாகன வசதி, காலையும் இரவும் கோப்பி, ரிபன், தரமான சைவ மதிய உணவு, ஹோட்டல்களில் சாதம், நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு லீற்றர் மினரல் வோட்டர் (குடிநீர்), தங்குமிடங்கள், 2 பேருக்கு 2 கட்டில் மெத்தையுடன் குளியல் அறையுடன் கூடிய அறைகள் எடுத்துத் தங்க வைக்கப்படுவார்கள்.

யாத்திரை தொடங்கி முடியும் வரை AC, Audio, Vedeo, உள்ள சொகுசு வாகன வசதி,

**கட்டண விபரம் கேட்டு அறிக!**

விருப்பமுடையோர் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு: **கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்,**
**No: 66/2-3/2 JOSEPH DIAS LANE**
**COLOMBO-15**
**T.P:0777680102, 0724222989**
**Web:www.Sridevipilgrims.com**

(சி/3988)

**இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000 ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளுக்கமைய சேவைநலன் கொண்டு குறைந்த செலவில் நடத்தப்படுகிறது.**

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1976 இந்து(Na)
நட்சத்திரம்: பூரம் 3 சூ,செ 3
தகைமை/தொழில்:A/L
வாகன painting
சொந்தம்
தொ.இ:B2001

பிறப்பு: 1981 இந்து(V)
நட்சத்திரம்: பூரம் 3
சூ,செ 4
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: O/L
வியாபாரம்
தொ.இ:B2002

பிறப்பு: 1986 இந்து (V)
நட்சத்திரம்: புனர்பூசம் 2
உயரம்: 5'5"
கி.பா :77.75
தகைமை/தொழில்: A/L
பிரான்ஸ் PR
தொ.இ:B2007

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: அத்தம் 3
உயரம்: 5'3" சூ,செ 11
தகைமை/தொழில்:A/L
UK Not PR
தொ.இ:B2009

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து(V)
நட்சத்திரம்: பூசம் 1
உயரம்: 155 செ.மீ
சூ,செ 7
தகைமை/தொழில்: A/L.IAM,AAT
தொ.இ:G2003

பிறப்பு: 1977 இந்து(V)
நட்சத்திரம்: பூசம் 1
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: BSc
கணக்காளர்
அவுஸ்திரேலியா PR
விவாகரத்தானவர்
தொ.இ:G2004

பிறப்பு: 1978 இந்து(V)
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா : 22.5
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எழுதுவினைஞர்
தொ.இ:G2005

பிறப்பு: 1980 இந்து(Do)
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா : 124.75 செ 1
உயரம்: 151 செ.மீ
தகைமை/தொழில்: BA
நிகழ்சித்திட்ட உதவியாளர்
தொ.இ: G2006

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**
**(சர்வதேச இலவச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை சிறப்பு மிக்க ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

கடந்த 23 வருடகாலமாக ஆயராகப் பணிபுரிந்து இன்று 75ஆவது அகவைகாணும் எமது ஆயர் அதி. வந்தனைக்குரிய தோமஸ்சவுந்தரநாயகம்ஆண்டகை அவர்கள் எம்பெருமான் இயேசு உரைத்த நல்லமேய்ப்பனுக்குரிய இலக்கணங்களுடன் வாழ்ந்து வருபவர். அவருடன் அருகிலிருந்து பணிசெய்யக் கிடைத்தகாலம் எனது வாழ்வின் பொற்காலமே!

குருத்துவம் என்ற இறை அழைப்புக்காக காத்திருந்து ஏழு ஆண்டுகளுக்கு மேல் மெய்யியல், இறையியல் கற்கைகளிலும் ஏனைய உருவாக்க முறைகளிலும் புடமிடப்பட்ட என் வாழ்க்கை நெறியில் அந்தப் பயிற்சிக் காலத்தில் பெறாத அனுபவத்தை ஆயர் அவர்களின் செயலாளராகப் பணி செய்யக் கிடைத்த ஏழு ஆண்டுகளில் பெற்றேன் என்றால் அதுமிகையாகாது. அதற்குரிய காரணம் யாதெனில், அவரது முன்மாதிரிகைமிக்கவாழ்வியல் முறையில் ஒரு குரு கற்றுக் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உட் பொதிந்து இருக்கின்றமையே ஆகும்.

இந்த நூற்றாண்டுமுன்மாதிரிகை மிக்க வாழ்வுநெறியின் கற்பித்தலைத்தான் வலியுறுத்தி நிற்கின்றது. எமது ஆயர் அவர்களிடம் அந்தமுன் அடையாளத்தை வாழ்வியல் ஊடாகக் தரிசித்தேன். அவரிடம் காணப்பட்ட பன்முகப்பட்ட ஆளுமைகளைக் கூறிக்கொண்டு போகலாம்.

- ♦ பிரச்சினைகளையும் சவால்களையும் நிதானத்துடன் எதிர்கொள்ளும் ஆளுமை
- ♦ எளிமை,பொறுமை, சகிப்புத்தன்மை மிக்கதான வாழ்வு முன்மாதிரிகை
- ♦ இறையியல் ஆழம்
- ♦ மனிதத்துவப் பண்புமிக்க அணுகுமுறை
- ♦ பரந்தஅறிவும் அனுபவ முதிர்ச்சியும் மிக்க ஆளுமை.

அவரிடம் காணப்படுகின்ற மிக முக்கியமான ஆளுமைச் சிறப்பு நிதானமும்,நேர்நோக்கும் குறிப்பாக எத்தகைய மலைபோன்ற பிரச்சினைகள் வந்தாலும் அவற்றில் மிகநிதானமாகமுடிவெடுக்க வல்லவராக இருப்பார். உடனடி உணர்நிலைப் பாத்திரமாக இல்லாது பொறுமையும் முதிர்ச்சியும் மிக்க தலைவனாக நின்று சிக்கல்களை எதிர்கொள்வார். உடனடியாக அவர் எந்த முடிவையும் கூறாதபோது சலிப்பு ஏற்படும். ஆனால், நிதானமானஅவரது செயல் வீச்சுஆச்சரியத்தையும் அதுதான் அந்த பிரச்சினைக்கான சரியான வழி என்ற உண்மையையும் துலக்கி நிதானமும் நேர்நோக்கும் கொண்ட ஆழ்ந்தஅன்ற அனுபவச் சமனிலையை அவரிடம் பலதடவைகள் தரிசித்துள்ளேன்.

ஆயர் அவர்கள் ஆயர் என்ற பெருமை துளியளவுமின்றி எளிமையான, சிக்கனமான வாழ்வு நிலையில் என்றும் ஒரே தன்மையில் வாழும் பண்பு. ஆடம்பரமற்ற வாழ்க்கை எந்தளவு வசதி வாய்ப்புக்கள் இருந்தாலும் அவற்றை நாடாமல் எளிமையையும் தரித்திரத்தையும் துறவொழுக்கத்தையும் ஆற்றொழுக்குப்போல் பின்பற்றி வருகின்றமை அந்த வாழ்வொழுக்கத்தால் நிறைந்து நிற்கும் பொறுமை, சகிப்புத்தன்மை ஆகியவை அனைத்தும் மனித நேய வாழ்விற்கு மேல் வரிச் சட்டத்தைப் போன்று எம்மையும் பின்பற்றத் தூண்டுவனவாகும்

ஆயர் அவரது இறையியல் ஆழமும் ஆன்மீக நிறைவும் என்றும் எல்லோரும் உணரத்தக்கது. செபம்,தியானம், ஒறுத்தல், திவ்விய நற்கருணை சந்திப்பு, செபமாலைபக்திமுயற்சிஎன்று ஒவ்வொரு விடயங்களிலும் போதனைகளிலும் சொல்வதையே செய்பவராகவும் ஆழ்ந்த இறைவார்த்தை கொண்டவராகவும் திகழ்வார்.

கடந்த 30 வருடத்திற்கு மேற்பட்ட உள்நாட்டுப் போரின் போதும் போருக்குப் பிற்பட்ட காலத்திலும் ஆயருடையநிதானம்,நடுநிலை தவறாத அணுகுமுறை, உணர்ச்சி வசப்படாத பேச்சு என்னும் பண்புகள் இலங்கைப் பிரச்சினையில் ஆர்வம் கொண்ட அனைத்து மக்களினதும் நன்மதிப்பைத் தேடிக்கொடுத்தன. பிரச்சினைகள் நிறைந்த நமது பிரதேசத்தில் அவரைஓர் கலங்கரைவிளக்காகவேகண்டேன்.



## ஆயரின் 75 ஆம் அகவையில் சிறப்பு கட்டுரை

நிறைவாக அவரது பரந்த அறிவும் முதிர்ச்சியும் ஆச்சரியப்படத்தக்க செயல். தொழில்நுட்ப அறிவுமுதல் கணனித் தொழில் நுட்ப அறிவுவரை அறிந்தவராக இருப்பதுடன் பெரும்பாலான தன்னுடைய தேவைகளைதானே நிறைவேற்றுபவராகவும் இருப்பார். இவ்வாறு உலகியல் அறிவுமுதல் இறையியல் அறிவுவரைதன்னளவில் நிறைவாகப் பெற்ற ஆயர் அவர்களின் ஆளுமைச் சிறப்பை கூறிக் கொண்டே போகலாம்.

எனவே, முன்மாதிரிகையும் ஆளுமையும் மிக்க ஆயனாக இன்று 75 ஆம் அகவை நிறைவினைக் கொண்டாடும் எமது ஆயர் எமக்கு வாய்க்கப் பெற்ற பெருங்கொடையே.அவரது பணியின் தொடர்ச்சிக்கும் உடல் உள ஆரோக்கியத்திற்கும் இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

**நீர் என்றென்றும் குருவே என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார் அவர்தம் மனத்தைமாற்றிக் கொள்ளார் (எபி7:21)**

அருட்பணி
எஸ்.எயின்சிலி றொஷான்
ஆசிரியர்
பாதுகாவலன்.

# எல்லை நிர்ணய பணிகளில் ஆலோசனை வழங்க அவகாசம்

எல்லை நிர்ணய நடவடிக்கை தொடர்பில் ஏதும் குறைபாடுகள் இருந்தால் அது குறித்து தேசிய எல்லை நிர்ணயஆணைக்குழுவுக்கு யோசனை முன்வைக்க முடியும் என்றும் அது குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித் துள்ளார்.

உள்ளூராட்சி சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எல்லை நிர்ணய பணிகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும். எல்லை நிர்ணயம் செய்வதற்காக மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமது தரப்பு யோசனைகளை முன்வைக்க கால அவகாசம் வழங்குமாறு எதிர்க்கட்சி கோரியது.

இதன்படி மேலும் 6 மாத காலம் அதன் பணிகள் நீடிக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எல்லை நிர்ணய பணிகள் நிறைவடைந்த பின்னர் அதிலுள்ள குறைபாடுகள் நிவர்த்திக்கப்படும்.

மாகாண சபையின் அனுமதியுடனே உள்ளூராட்சி சபைகள் செயற்பட வேண்டியுள்ளது. அதனாலேயே உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.

எல்லை நிர்ணய குழுக்கள் சகல தரப்பினரதும் கருத்துக்களை வினவியே தனது பணியை மேற்கொள்கிறன. (அ-2)

# தேர்தலை கண்காணிக்க கண்காணிப்பாளர்கள் வருவர் என்கிறது பவ்ரல்

மத்திய, வடக்கு, வடமேல் ஆகிய மாகாண சபை தேர்தல் வாக்களிப்புகளின் போது பணியில் ஈடுபடுவதற்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் 10 பேர் இலங்கை வரவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களே இலங்கை வர தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே பவ்ரல் அமைப்பு அரசியல் கட்சிகளிடம் எழுத்து மூலமான கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

உத்தேச மாகாண சபைத் தேர்தல்களின் போது முறைகேடுகள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்களுக்கு வேட்புமனுத் தாக்கல்களை மேற்கொள்ள இடமளிக்க வேண்டாம் என்று பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ-2)

## வானொலியில் நேரடி அஞ்சல்

ஆவரங்கால் அருள்மிகு நடராசா இராமலிங்க சுவாமி (சிவன்கோவில்) ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் தேர்த் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.

இத் தேர்த்திருவிழா நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். எப்.எம்.வானொலி நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளது.

இந் நேரடி அஞ்சல் நேர்முக வர்ணனையை வர்ணனைக் கலாநிதி. மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தன் ஆலயத்திலிருந்து நிகழ்த்தவுள்ளார். (அ)



சுவிஸ் வாழ் எஸ்.பாலச்சந்திரன் மற்றும் புலம்பெயர்வாளர்களின் நிதி உதவியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வடமாகாண பற்றுநோய் எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கப் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மேற்படி உணவுப் பொருட்கள் 91 பெண்களுக்கு வழங்கப்பட்டது.

# எச்சரிக்கையாக இருங்கள்; பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

தொலைபேசி அழைப்புக்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் மக்களைக் கேட்டுள்ளனர்.

பொலிஸ் திணைக்களம், குற்றத்தடுப்புப் பிரிவு, பயங்கரவாத விசாரணை திணைக்களம் ஆகிய இடங்களில் இருந்து பேசுகின்றோம் என்று வரும் தொலைபேசி அழைப்புகளை பற்றி கவனமாக இருக்குமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இப்படியான அழைப்பு விடுக்கப்பட்டபணமோசடிகள்நடந்திருப்பதாக புலன்விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக அறிவித்துள்ளனர்.

பயமுறுத்தல், பணம் கேட்டு அச்சுறுத்தல் செய்யும் குழுக்களைப் பற்றிய தகவல்கள் தங்களுக்கு கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.
– கிரீஸ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனை எதிர்க்கும் புத்திஜீவிகள் யார் ?

விடுதலைப்புலிகளின் தலையில் மண்போட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஓர் வரலாற்றுத் துரோகத்தை இழைக்க முற்படக்கூடாது.

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதற்கு மாற்றுத் தெரிவின்மை காரணம் என்பதை முதலில் அந்த அமைப்பினர் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே தமிழ் மக்களின் ஆதரவு உண்டு என்பது நீண்டகாலத்திற்கு சாத்தியமானது அல்ல.

தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு துரோகம் இழைக்கப்படுவதை தமிழ் மக்கள் அறிந்து கொள்ளாமல்விடினும் ஆண்டவன் அதற்கு அதிக காலம் விட்டுக்கொடுக்கப் போவதில்லை.

இப்போதுகூட, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நியமிப்பதற்குப் பதவியாசை பிடித்த ஒருசிலர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

அந்த எதிர்ப்பை புத்திஜீவிகள் எதிர்ப்பதுபோல காட்டுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் மகா கொடுமைத்தனமாகும்.

வடக்கு மாகாண சபைக்கு மிகப் பொருத்தமான முதலமைச்சர் வேட்பாளர் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் என்பது மறுக்க முடியாத உண்மை.

இதைக் கூறுவதற்காக மாவை சேனாதிராஜாவுக்கு நாம் எதிரானவர்கள் என்பது பொருளல்ல.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் கூறுவதுபோல, பதவியில் இருக்கின்ற ஒருவர், அந்தப் பதவியில் இருக்க, ஆளுமையும் நேர்மையும் சட்டத்துறையில் நிபுணத்துவமுடையவருமான ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நியமிப்பதே பொருத்தமுடையதாகும்.

மாவை சேனாதிராஜாவின் அரசியல் பங்கிற்கும் அகிம்சை வழி விடுதலைப் போராட்டத்தில் அவர் கொண்ட ஈடுபாட்டிற்கும் நாம் கனதியான மதிப்பளிக்கின்றோம்.

அதேநேரம் பாராளுமன்றத்தில் தமிழ்த் தரப்பில் உரக்கக் குரல் கொடுக்கின்ற பாராளுமன்ற உறுப்பினராக இருந்து அவர் தனது பணியைத் தொடரலாம்.

ஆனால், மாவை சேனாதிராஜாவை அரசியல் நீரோட்டத்தில் இருந்து வீழ்த்துவதற்காகவும் அவரின் இடத்தை தாங்கள் பிடிப்பதற்காகவும் சிலர் செய்யும் சதித் திட்டமே மாவையை முதன்மை வேட்பாளராக நிறுத்தும் முயற்சி.

இத்தகைய சதி முயற்சிக்கு பழுத்த அரசியல்வாதியான மாவை சேனாதிராஜா இடம்கொடுக்கலாகாது.

வடக்கு மாகாண சபையின் முதன்மை வேட்பாளராக ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை நியமித்து மாவை தனது பெருந்தன்மையை நிரூபிக்க வேண்டும்.

அதேநேரம் விக்னேஸ்வரனை எதிர்க்கும் புத்திஜீவிகள் எவரும் வடக்கு மாகாணத்தில் இல்லை என்பதை இந்த இடத்தில் அறுதியிட்டுத் தெரிவிப்பதுடன், யாருக்கேனும் அதுபற்றி ஆதாரம் தேவைப்பட்டால் அதனை நிரூபிக்கவும் நாம் தயாராகவுள்ளோம்.

## ஒரு தொகை பணம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் ஒரு தொகைப்பணம் கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை கண்டெடுக்கப்பட்டு வங்கியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவற விட்டவர்கள் சரியான ஆதாரங்களுடன் நேரடியாக வங்கி வாடிக்கையாளர் சேவை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வங்கி வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் அறிவித்துள்ளார். (அ)

## காந்தி சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு காந்தி சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் த. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக உங்கள் நண்பன் நிறுவனத்தின் தலைவர் க.செல்வேள், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம், வலி. கிழக்கு பிரதேச மத்தியஸ்தர் சபைத் தலைவர் இ.மயில்வாகனம், உரும்பிராய் கிழக்கு கிராம சேவையாளர் எஸ்.எழிலரசன், உரும்பிராய் புனித மைக்கல் ஆலய பங்குத் தந்தை ஆ.யூட் நிக்ஷன், சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர் கு.சிவகுமார், உரும்பிராய் பிரதேச சபை பொறுப்பதிகாரி திருமதி ஜானகி கணேசலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-134)

## புற்றுநோயாளர்களுக்கு இலவச உலர் உணவு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண புற்றுநோய்-எயிட்ஸ் நோய்த்தடுப்புச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆண் புற்றுநோயாளர்களுக்கு இலவச உலர் உணவு விநியோகிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அனுமதி அட்டைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் க.பொ.த உ/த பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

எனவே மாணவர்கள் சீருடையுடன் சமுகம் தந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் கேட்டுள்ளார். (அ)

## 6 ஆயிரம் ரூபா தண்டம்

சட்டவிரோதமாக பசு மாட்டை வெட்டிய நபருக்கு 6ஆயிரம் ரூபாஅபராதம் விதித்து மல்லாகம் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி ஏழாலை வடக்கு கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகில் சட்டவிரோதமாக பசு மாடு வெட்டப்பட்டு இறைச்சி பங்கு போடப்படுவதாக சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார் மாடு வெட்டிய நபரை கைது செய்ததுடன் பங்கு இறைச்சியையும் கைப்பற்றினர்.

பொலிஸார் குறித்த சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த தீர்ப்பளித்ததுடன் இறைச்சியை அழிக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (அ-ம)

## தேர்த் திருவிழா

புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் கோயில் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமையும் தீர்த்தத்திரு விழா நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.(அ-5)

## மாவிட்டபுரம் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் காம்யோற்சவப் பெருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையான 25 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருக்கார்த்திகைத் திருவிழாவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

மேலும் மாவைக்கந்தன் ஆலயக் கட்டிடப் பணிகள் விரைவாகப் பூர்த்தி செய்து மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதால் அடியவர்கள் திருப்பணிக்கான நிதியுதவிகளை ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகக் கிளை திருப்பணி நிதி இலக்கம் 117020042437 கணக்கில்வைப்பிலிட்டுஉதவுமாறு ஆலய நிர்வாகத்தால் கேட்கப்பட்டுள்ளது. (அ)

## அறநெறிப் பாடசாலை ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

மார்க்கண்டு சுவாமிகள் சபையினால் பிரான்பற்றில் நாளை ஞாயிற்றுக்கிழமை மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப்பாடசாலை ஆரம்ப விழா சபைத் தலைவர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் கலந்துகொண்டு அறநெறிப் பாடசாலையின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அதிபர் க.கிருஸ்ணானந்தா, கொக்குவில் சிவத்தமிழ் மானிட விடியற்கழக ஆலோசகர் சி.சோதிமூர்த்தி, பிரான்பற்று கிராம அலுவலர் க.சுதர்சன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப.கயிலநாயகி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### போர்க்களத்தில் மாய்வது மேல்



❁ உன்னால் ஒருவருக்கும் உதவி செய்யமுடியாது. மாறாக உன்னால் சேவைதான் செய்யமுடியும். உயிர்களுக்கு தொண்டு செய்பவன் கடவுளுக்கே தொண்டு செய்தவன் ஆவான்.

❁ நீ செல்லும் பாதை, கத்தி முனையில் நடப்பது போல மிகவும் கடினமானதுதான் என்றாலும் மனம் தளராமல் குறிக்கோளை நோக்கி முன்னேறு.


❁ தோல்வியைத் தழுவி உயிர்வாழ்வதை விடப் போர்க்களத்தில் மாய்வதே மேல்.

❁ மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நீ உனது சொந்த உறுதியான முடிவில் பிடிப்புடன் இரு. பின்பு நிச்சயமாக ஏனையவை நடந்தேறி உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கும்.

❁ ஒரு கருத்தை எடுத்துக்கொள். அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கைமயமாக்கு. அதையே கனவுகாண். மூளை, தசை, நரம்பு என உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்த கருத்தே நிறைந்திருக்கட்டும்.

❁ எது வந்தாலும் போராடிக்கொண்டிரு. கோழையாவதனால் நீ எந்த ஒரு பயனையும் பெறமாட்டாய்.

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



உங்கள் மனைவி அல்லது கணவருடன் உறவுமுறைகளை எவ்வாறு சீர்செய்து கொள்ளவேண்டும் என்று விபரிக்கும் அனைத்து மனோதத்துவ மற்றும் தத்துவ நூல்களை முதலில் தூக்கி வெளியே எறிய வேண்டும். ஓர் உறவுமுறையைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது எந்தவிதத்திலும் உதவாது. புரிந்துகொள்ள முயற்சித்தல் என்பது ஒரு வெங்காயத்தை உரிப்பதுபோல உரிக்க உரிக்க உள்ளே ஒன்றுமே இருக்காது. மற்றவர்களை ரசித்து அனுபவிக்கும் கலையை நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். உங்கள் கணவரையோ மனைவியையோ அனுபவிக்கக் கற்றுக்கொண்டு விட்டீர்கள் என்றால் இப்பூமியில் அதைவிடப் பெரிய ஆனந்தம் இருக்கமுடியாது. மனிதர்களை எவ்வாறு ரசித்து அனுபவிப்பது என்பது உங்களுக்குத் தெரியாததே இப்போது பிரச்சினை. உங்களுக்கிடையே உள்ள தொடர்பை நீங்கள் உணர்வதில்லை. ஒருமுறை என்னைச் சந்திக்க மிக உயர்ந்த பதவி வகிக்கும் மருத்துவர் ஒருவர் வந்திருந்தார். அவரின் மனைவியோ காய்கறிகள் விற்பவர். அவர் மிகவும் நாகரிகமற்ற மிக மோசமான வார்த்தைகளைப் பேசும் ஒரு மனைவி. அவர்களுக்குத் திருமணமாகி 25 ஆண்டுகளாகிவிட்டன. ஆச்சரியமாக நான் பார்த்ததிலேயே மிகச்சிறந்த, மிக ஆனந்தமாக வாழும் தம்பதியர் அவர்களே. அவர்களுக்குள் எந்த மனவேறுபாடும் இல்லை. ஏனெனில் அவர்கள் ஒருவரை ஒருவர் மாற்றுவதற்கு முயற்சிப்பதில்லை. ஒருவரை ஒருவர் பரிபூரணமாக ரசித்து வியக்கின்றனர். இன்றைக்குத் தொல்லையே மனிதர்களுக்கு ஒருவரை ஒருவர் ரசித்து ஒருவரை ஒருவர் அனுபவிக்கத் தெரியாதது.

உங்கள் மனைவியை நீங்கள் மாற்ற முயற்சிக்காவிட்டால் அவள் உங்களிடம் கத்தும்போதோ தொந்தரவு கொடுக்கும்போதோ அதுவே மிகச்சிறந்த அனுபவமாக இருக்கும். அதேபோல் மனைவி, கணவன் தன்னைத் துன்புறுத்தும்போது அதைப்பார்த்து அனுபவித்தால் அதுவே ஆனந்தமாக மாறிவிடும். உறவுமுறைகள் சீர்செய்து கொள்ள இந்த ஒரேவழிதான் உள்ளது. ஏனெனில் அதுவே ஆனந்தம் தொடங்கும் இடமாகிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முக்கோணத் தொடரின் இறுதியாட்டத்தில்

# இலங்கையை வீழ்த்தி இந்தியா சம்பியன்




## இறுதி ஓவரில் வானவேடிக்கை காட்டிய தோனி ஆட்டநாயகனாக தேர்வு

முக்கோண ஒருநாள் தொடரின் இறுதியாட்டத்தில், அணித் தலைவர் தோனியின் அசத்தல் ஆட்டம் கைகொடுக்க, இந்திய அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தி, கிண் ணத்தை வென்றது.

மேற்கிந்தியத் தீவுகளில் இடம்பெற்ற முக்கோண (இலங்கை, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள்) ஒருநாள் தொடரின் இறுதி ஆட்டத் தில் இலங்கை - இந்திய அணிகள் மோதின.

தொடையின் பின்பகுதியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து மீண்ட, இந்திய அணித் தலைவர் தோனி இறுதியாட்டத்தில் களமிறங்கி னார். முரளி விஜய், உமேஷ் யாதவ் நீக்கப்பட்டனர். வினய்குமார் இடம் பிடித்தார். இலங்கை அணியில் சுராங்கா லக்மல், குசால் பெரேரா வாய்ப்பு பெற்றனர். போர்ட் ஆப் ஸ்பெயினில் உள்ள குயின்ஸ் பார்க் ஓவல் விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் தோனி, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் உபுல் தரங்கா (11), மஹேல ஜெயவர்தனா (22) ஆகியோர் புவ னேஷ்வர் குமார் "வேகத்தில்" வெளியேறினர். பின் இணைந்த சங்க கரா, திரிமான்னே ஜோடி, விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. இந்திய பந்துவீச்சை எளிதாக சமாளித்த சங்ககார, ஒருநாள் போட்டி யில் தனது 77ஆவது அரைசதம் அடித்தார். மூன்றாவது விக்கெட் டுக்கு 122 ஓட்டங்கள் சேர்த்தபோது திரிமான்னே (46) அரைசத வாய்ப்பை இழந்து வெளியேறினார். இஷாந்த பந்தில் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த சங்ககார (71), அஷ்வின் "சுழலில்" சிக்கினார்.


அடுத்து வந்த குசால் பெரேரா (2), தினேஷ் சண்டிமால் (5), அணித் தலைவர் மத்யூஸ் (10), ஹெராத் (5), லசித் மலிங்கா (0), சுராங்கா லக்மல் (1) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். இலங்கை அணி 48.5 பந் தில் 201 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட் டுகளையும் இழந்தது. இந்தியா சார்பில் ரவீந்திர ஜடேஜா 4, புவனேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா, அஷ்வின் தலா 2 விக்கெட்டு களைக் கைப்பற்றினர்.

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஷிகர் தவான் (16) ஏமாற்றினார். அடுத்து வந்த விராத் கோலி (2) நிலைக்க வில்லை. ஹெராத் சுழலில் தினேஷ் (23) வெளியே றினார். அரை சதம் கடந்த ரோகித் 58 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்தார். ரெய்னா வும் (32) பெவிலியன் திரும்பினார். பின் வந்த தோனி திறமையான ஆட்டத்தை வெளிப் படுத்தினார். மலிங்கா ஓவரில் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரி விளாசி அசத்தி னார். ஹெராத் ஓவரில் ஜடேஜா (5), அஷ்வின் (0) அடுத்தடுத்து சிக்கினர். இருப்பினும், தனி ஆளாக தோனி போராடினார். புவனேஷ்வர் (0), வினய் குமார் (5) நிலைக்க வில்லை.

### தோனி அதிரடி

எரங்கா வீசிய கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், தோனி அதிரடி காட்டினார். முதல் பந்தில் ஓட்டம் எடுக்கவில்லை. இரண்டாவது, மூன்றாவது பந்தில் தலா ஒரு சிக்சர், பவுண்டரி அடிக்க, ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். நான்காவது பந்தில் ஒரு இமாலய சிக்சர் அடித்து வெற்றியை உறுதி செய்தார். இந்திய அணி 49.4 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 203 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தோனி (45), இஷாந்த் சர்மா (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக ஹெராத் 4 விக்கெட் வீழ்த்தினார். ஆட்ட நாயகன் விருதை அணித் தலைவர் தோனி வென்றார். தொடர் நாயகன் விருதை இந்திய அணியின் புவனேஷ்வர் தட்டிச் சென்றார்.

## ஐ.சி.சி.யின் தலைசிறந்த வீரராக ஷேன் வோர்ண்




சர்வதேச கிரிக்கெட் சபை(ஐ.சி.சி) தலை சிறந்து விளங்கிய வீரர்களை ஆண்டுதோறும் தேர்வுசெய்து அவர்க ளது பெயரை 'ஹால் ஆப் பேம்' பட்டிய லில் சேர்த்து கௌரவம் அளித்து வருகிறது. இந்த ஆண்டு அவுஸ்திரே லிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண் இந்த கௌர வத்துக்கு தேர்வாகி இருக்கிறார்.

இதற்கான அதிகாரப்பூர்வமான சான்றிதழ் ஷேன்வோர்ணிடம் ஆஷஸ் 2ஆவது டெஸ்ட் போட்டியில் 19ஆம் திகதி தேநீர் இடைவேளை யின்போது வழங்கப்படுகிறது.

ஹால் ஆப் பேம் பட்டியலில் இடம்பெறும் 69ஆவது வீரர் வார்னே ஆவார். 43 வயதான வார்னே 2007ஆம் ஆண்டு சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். வார்னே 145 டெஸ்டில் விளையாடி 708 விக்கெட்டும், 194 ஒருநாள் போட்டியில் ஆடி 293 விக்கெட்டுகள் வீழ்த்தி னார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் இரண்டு நடுவர்களுக்கு தடை

இலங்கை பிரீமியர் லீக் போட்டியின்போது குறிப்பிட்ட வீரர்களுக்கு உதவி செய்யும் வகையில் முடிவுகளை மாற்றி வழங்க இலங்கை, பாகிஸ்தான் மற்றும் பங்களா தேசைச் சேர்ந்த 6 நடுவர்கள் விருப் பம் தெரிவித்தனர் என்ற குற்றச் சாட்டை இந்திய தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று வெளியிட்டிருந்தது. இதையடுத்து 6 பேரும் இடை நிறுத்தப்படுவதா செய்யப் படுவதாக ஐ.சி.சி. அறிவித்திருந்தது.

இவர்களில் இலங்கை நடுவர்களான சகாரா கல்லாஜ் மற்றும் மவு ரிஸ் டி லா சில்வா ஆகியோர் மீதான குற்றச்சாட்டு நிரூபணமானது. இதையடுத்து சகாராவுக்கு 10 ஆண்டு தடையும், மவுரிசுக்கு 3 ஆண்டு தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வீரர்கள் தவிர பாகிஸ தானின் நதீம் கவுரி, அனீஸ் சித் திக்கி, வங்கதேசத்தின் நதிர் ஷா ஆகியோர் மீதும் குற்றஞ்சாட்டப்பட் டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கங்குலியை பின்பற்றுபவராம் கோலி



இந்திய கிரிக்கெட் அணியின் உப தலைவர் விராட்கோலிக்கு பயிற்சியாளராக இருந்த ராஜ்குமார் ஷர்மா அளித்த ஒரு பேட்டியில், 'இயற்கையாகவே விராட்கோலி ஆக்ரோஷமான வீரர். அதிரடி தாக்குதல் மூலம் எதிரணியை சாய்க்கவேண்டும் என்று விரும்பக்கூடியவர். அது தான் அவர் தலைவராக செயற்படுகையில் பிரதிபலிக்கிறது.

அணித் தலைவர் பதவியில் கங்குலியின் ஆக்ரோஷமான அணுகுமுறையை விராட் கோலி பின்பற்றுகிறார். ஆக்ரோஷமாக செயற்படும்போது விராட்கோலி எல்லையை மீறி செயற்படமாட்டார் என்று நம்புகிறேன். அப்படி அவர் செயற்பட்டால் நான் தலையிட்டு அவருக்கு அறிவுறுத்துவேன். தோனி விதிவிலக்கான அணித் தலைவர். தோனியிடம் இருந்து விராட்கோலி இன்னும் நிறைய கற்றுக் கொள்ளவேண்டும். அணித்தலைவர் பதவிக்கு வயது பொருட்டல்ல. ஆட்ட சூழ்நிலையை கணித்து சிறப்பாக செயற்படுவது தான் முக்கியம்' என்று தெரிவித்தார்.

## இந்தியா - தென்னாபிரிக்கா கிரி. போட்டி அட்டவணையில் மாற்றம்?

இந்திய கிரிக்கெட் அணியின் தென்னாபிரிக்க சுற்றுப் பயண விபரம் வெளியிடப் பட்டுள்ளது. இதன்படி இந்திய அணி நவம்பர் 18ஆம் திகதி முதல் ஜனவரி 19ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் இரண்டு 20 ஓவர் போட்டி, 7 ஒருநாள் போட்டி மற்றும் 3 டெஸ்டில் விளையாடுகிறது. போட்டி அட்டவணை விபரத்தை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வெளியிட்டிருந்தது.

இந்தப்போட்டி அட்டவணைக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை எதிர்ப்பு தெரிவித்து தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. தங்களிடம் கலந்து ஆலோசிக்காமல் போட்டி அட்ட வணையை வெளியிட்டுவிட்டதாக கிரிக்கெட் சபையின் இடைக்கால தலைவர் செயலாளர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

2ஆவது டெஸ்டுக்கும், 3ஆவது டெஸ்டுக்கும் அதிக இடைவெளி இருப்பதாக கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக போட்டி அட்டவணையை மாற்றி அமைககக் கோரி தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்கு கடிதம் எழுதப்பட்டிருப்பதாக கிரிக்கெட் சபையின் செய லாளர் தெரிவித்தார்.


## ஒருநாள் போட்டி தரவரிசை

International Cricket Council

ஐ.சி.சி ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலில் இந்திய அணி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. ஒருநாள் போட்டிகளுக்கான தரவ்ரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டது. இதில் 122 புள்ளிகளுடன் இந்திய அணி தொடர்ந்து முதலி டத்தில் உள்ளது. 113 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி 2வது இடத்திலும், 113 புள்ளிகளுடன் அவுஸ்திரேலிய அணி 3வது இடத்திலும்(சம புள்ளி அடிப்படையில் இங்கிலாந்துக்கு 2வது இடம்) உள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெல், பிரோட் அதிரடி இங்கிலாந்து முன்னிலை



பெல், ஸ்ரூவர்ட் பிரோட்டின் சிறப்பான ஆட்டத்தின் காரணமாக அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியின் 3-ம் நாள் நிறைவில் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் 261 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி, 5 போட்டிகளைக் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி நொட்டிங்ஹாமிலுள்ள ட்ரன்ட்பிரிஜில் கடந்த 10 திகதி ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து தமது முதல் இன்னிங்சிக்காக 59 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஜொனதன் ட்ரொட் அதிகபட்சமாக 48 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் ஆஸி அணி சார்பாக பீற்றர் சிடில் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சை ஆரம்பித்த ஆஸி அணி அன்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் 4 முக்கிய விக்கெட்டுக்களை 75 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறிக் கொண்டிருந்தது.

தொடர்ந்து 2-ம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த அவ்வணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது.

இதன்காரணமாக அவ்வணி ஒருகட்டத்தில் 9 விக்கெட்டுக்களை 117 ஓட்டங்களுக்குள் இழந்து பரிதாப நிலையில் இருந்தபோது இறுதிவிக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த பிலிப் ஹியூஸ்-அறிமுக வீரர் ஏகர் ஜோடி தமக்கிடையில்163 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்ததுடன் 10-வது விக்கெட்டுக்கான சாதனை இணைப்பாட்ட ஓட்டங்களாகவும் பகிர்ந்து கொண்டது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக பிலிப் ஹியூஸ் ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களையும், ஏகர் 98 ஓட்டங்களையும் எடுத்தனர்.இதில் ஏகர் எடுத்த 98 ஓட்டம் 11-வது இலக்க துடுப்பாட்ட வீரர் எடுத்த அதிபட்ச உலக சாத்னை ஓட்டமாகும்.

தொடர்ந்து தமது இரண்டாவது இன்னிங்ஸை 65 ஓட்டங்கள் பின்னிலையில் ஆரம்பித்த இங்கிலாந்து அணி, நேற்றுமுன்தினம் 2-ம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடர்ந்து நேற்றைய 3-ம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த இங்கிலாந்து அணி, ஸ்ரூவர்ட் பிரோட், இயன் பெல்லின் சிறப்பான ஆட்டத்தின் காரணமாக ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 326 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக பெல், பிரோட் ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 95, 47 ஓட்டங்களை எடுத்தனர்.ஆஸி அணியின் பந்துவீச்சில் ஏகர், பற்றின்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் 4-ம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## குடும்பப் பெண் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தர் ஒருவர் தாக்கியதில் இளம் குடும்ப பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில்வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் கிளிநொச்சியில் ஊரியான் முரசுமோட்டை என்னும் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினை சேர்ந்த திருமதி ச.மதனிகா (வயது 25) என்பவரே படுகாயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.(செ)

## மோ. சைக்கிள் விபத்து இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 9 மணியளவில் பருத்தித்துறை வீதி குஞ்சர்கடை மூத்த விநாயகர் கோவிலடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் உடுவிலைச் சேர்ந்த நடராஜா (வயது47) வல்வெட்டித்துறை கம்பர்மலையைச் சேர்ந்த சிவராஜா நிதர்சன் (வயது 18) ஆகியோரே படுகாயமடைந்துள்ளார்.

முன்னே சென்றுகொண்டிருந்த மோட் டார் சைக்கிளை பின்னே சென்ற மற்றைய மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. (செ)

## அம்பாள் ஆலயத்தில் 75 பவுண் நகை திருட்டு

(கரணவாய்)

கரணவாய் கிழக்கில் உள்ள புவனேஸ்வரி அம்பாள் உச்சில் ஆலயத்தில் 75 பவுண் தங்க நகைகள் திருடர்களால் அபகரித்து செல்லப் பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

மேற்குறித்த ஆலய தெற்குப்புற வாசலை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 75 பவுண் நகைகளை அபகரித்ததுடன் கதவின் பூட்டை வயலுக்குள் எறிந்துவிட்டு சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் மோப்பநாய்கள் சகிதம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கரணவாய் கிழக்கில் உள்ள வீடொன்றில் உள்ள இரு நபர்களை மோப்ப நாய்கள் இனங்காட்டியதையடுத்து இரு நபர்களையும் பொலிஸார் விசாரணை செய்து வருகிறார்கள். (ம-60)

## மிதிவெடி...

ஜேசுதாசன் லியோ (வயது 29) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த குடும்பஸ்தருக்கு ஹலோ ரஸ்ட் நிறுவனம் சம்பவ இடத்தில் வைத்து முதலுதவி அளித்து பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முகப்பகுதி உட்பட்ட அனைத்து உடல் பாகங்களும் கடுமையாக பாதிப்படைந்துள்ளமையால் இவருக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

படுகாயமடைந்த குடும்பஸ்தர் மிதிவெடி அகற்றலில் ஈடுபட்டிருந்த இடம் கடற்கரையினை அண்மித்த இடம் என்பதனால் மணல் நிறைந்த ஆபத்தான இடம் எனவும் அங்கு ஏனைய பகுதிகளினைவிட அதிகமான மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதால் இங்கு மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவது மிகவும் கடினமாகும் என ஹலோ ரஸ்ட் அதிகாரியொருவர் தெரிவித்தார். (செ-4)

## மகிந்த - சம்...

அதேபோல, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவது பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிசும் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவும் உடனிருந்துள்ளனர்.

இந்த சந்திப்பு சினேகபூர்வமாக அமைந்திருந்ததாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்திய மத்திய அரசின் பிரதிநிதியாக அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய பாதுகாப்பு விவகாரங்களிற்கான ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மகிந்தவுடன் நடத்திய பேச்சுக்களையடுத்தே இந்த அவசர சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## படை முகாம்...

காலத்தில் மரங்களுக்கு மேலிருந்தும் காப்பரண்களிலிருந்தும் பணியாற்றிய பலர் இன்னும் இந்தப் பகுதிகளில் கடமையில் இருக்கின்றார்கள்.

அன்று யுத்தத்தில் ஈடுபட்டிருந்த படையினர் யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து, கடந்த 4 வருடங்களாக சமாதான நடவடிக்கைகளிலும், அபிவிருத்தி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளிலும் சிறந்த முறையில் பங்களிப்பு செய்து வருகின்றார்கள்.

யுத்தம் முடிவடைந்ததையடுத்து, இறுதி யுத்தத்தின்போது மனித உரிமைமீறல் சம்பவங்களில் ஈடுபட்டதாகவும், பல்வேறு சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் இராணுவத்தினர் மீதும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எனினும் அவற்றைச் சரியான முறையில ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் எதிர்கொண்டிருந்தார்கள்.

யுத்தம் முடிவடைந்ததையடுத்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பணிகளில் பயிற்சி பெற்று, படையினர் ஈடுபட்டு சிறந்த முறையில் பங்களித்து வருகின்றார்கள்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் சிறப்பாகச் செயற்பட்டதைப் போலவே சமாதான காலத்திலும் எமது படையினர் சிறந்த முறையில் செயற்பட்டு வருவது மகிழ்ச்சியளிக்கின்றது.

• இந்தச் செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.(செ-11)

## தேர்தல் அசம்பாவிதங்...

ஸார்விசேட ஏற்பாடுகள்ஏதாவது செய்துள்ளனரா?

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ஒரு சில அரசியல் கட்சிகள் மீது இராணுவத்தினரும் இனந் தெரியாத நபர்களும் அச்சுறுத்தல்களினை ஏற்படுத்தியிருந்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் வடக்கு மாகாண தேர்தலின் போதும் இடம்பெறுமா? அதனைத் தடுப்பதற்கு பொலிஸாராகிய நீங்கள் ஏதாவது முன்னேற்பாடான நடவடிக்கை எடுப்பீர்களா? எடுத்துள்ளீர்களா? என ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும். யார் தேர்தலில் வேட்பாளராக நின்றாலும் எமக்கு பரவாயில்லை. நாம் வாக்காளர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவோம்.

வடக்கு மாகாண தேர்தலினை முன்னிட்டு நடைபெறவுள்ள அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசார கூட்டங்கள் சட்டததிற்குட்பட்டவையாக காணப்பட்டால் அத் தேர்தல் பிரசார கூட்டங்களுக்கு கட்சி வேறுபாடின்றி பாதுகாப்பு வழங்குவோம் என்றார் அவர்.

இதேவேளை தேர்தல் காலங்களில் இடம்பெறும் அச்சுறுதத்தல்கள் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் பக்கச் சார்பான விசாரணையினை மேற்கொண்டால் மனிதவுரிமை ஆணைக்குழுவிடம் முறையிட முடியும் என மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

## தமிழ் மக்கள் விரும்...

பட்டள்ள அமைச்சர் மேர்வின சில்வா யாழ். மாவட்டத்திற்குட்பட்ட கொடிகாமம், சாவகச்சேரி பகுதிகளுக்கு நேற்று மாலை விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதில் சாவகச்சேரி பகுதியில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட அமைச்சர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்திருந்தார்.

இதன்போது 13ஆவது அரசியல் திருத்தச் சட்டம் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், பிள்ளை பிறப்பதற்கு முன்பு பெயர் வைக்க முயற்சிக்காதீர்கள். அது அறிவற்றவர் செய்யும் செயல்.

13ஆவது திருத்தச்சட்டம் குறிதது இலங்கை அரசாங்கம் இதுவரை எந்தவொரு முடிபினையும் எடுக்கவில்லை இதனை என்னால் உறுதிப்படுத்த முடியும்.

இதுதவிர பொதுமக்களுக்கு விருப்பமில்லாததை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுமத்தமாட்டார் எனவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த 30 வருடமாக வடக்கு பொதுமக்கள் எங்களை சந்திக்கவில்லை. அதற்கு பிரதான காரணம் பயம். ஆனால் அந்தப் பயத்தினை இல்லாமல் செய்தது எங்களுடைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷதான்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பயந்து மக்கள் ஒடுங்கியிருந்தனர். அந்த காலத்திலும் இந்த மேர்வின் சில்வா இங்கு வந்து சென்றேன்.கடந்த 9 மாதத்திறகு முன்பும் இங்கு வந்து சென்றுள்ளேன்.

எனக்கு வடக்கும் ஒன்றுதான் தெற்கும் ஒன்றுதான். சண்டை பிடிக்கும் சேவல் எங்கு வேண்டுமானாலும் சண்டை பிடிக்கும். எங்கிருந்தாலும் எல்லா மக்களும் எங்களுடைய மக்கள். எனது அமைசசுக்கூட பொதுமக்கள் உறவுடன் தொடர்புடைய அமைச்சுதான்.

என்னில்மக்களுக்கு அன்பு. மக்களில்எனக்கு அன்பு. எங்களில் நம்பிக்கை வையுங்கள், எங்களை நம்புங்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு குறித்து கேட்டபோது மழுப்பலாக பதிலளித்த அமைச்சர்மேர்வின் வீதி அபிவிருத்திதான் தீர்வென்ற வகையிலும் கருத்துக் கூறியிருந்தார். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று தேர்தல் செலவினங்...

உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒகஸ்ட் 5ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை பரீட்சைகள் இடம்பெறும் காலம் என்பதால் குறித்த காலத்தில் பாடசாலைகளுக்கு அருகில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வது முற்றாகத் தடை செய்யபட்டுள்ளது.

மேலும் இசை நிகழ்ச்சிகளை நடத்துதல், மாலை 5 மணிக்கு பின்னர் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல் என்பன குறித்த காலத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. வடமாகாண தேர்தலுக்கு 850 மில்லியன் ரூபாய் ஏற் கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த தொகை மேலும் அதிகரிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார். (செ-11)

**வேலைவாய்ப்பு**
புத்தக விற்பனைக்காக வெளி இடங்களுக்குச் சென்று வேலை செய்யக்கூடியவர் தேவை.
தொடர்பு : 0772174741
(3359)

**465,000 ரூபா மட்டுமே செலவழித்து**
50000 ரூபா வருமானத்துடன்
தொழிற்பயிற்சியைப் பெற்று விரும்பிய நாட்டில் மாதம் 1 லட்சம் ரூபாவிற்கு மேல் உழைக்கலாம்.
**விரையுங்கள்**
கல்வித்தகைமை 9ம் வகுப்பு போதும்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
நேரடி.:0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com web:www.sikaram.lk
(C-3989)

**தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான "புகழின்" வழிகாட்டற் கருத்தரங்கு - 2013**
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம் : 21/07/2013 (காலை 9.00 மணிமுதல் மாலை 3.30 மணி வரை)
ஆசிரியர் : திரு.லோ.விஜேந்திரன் (புகழ் வெளியீட்டு ஆசிரியர்)
திரு.பூ.குகதாசன் (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி, யாழ் கல்வி வலயம்)
திரு.S.மகிழ்ராஜன் (பிரபல ஆசிரியர், மன்னார்)
★ பரீட்சைக்கால உடல் உள ஆரோக்கியம் பேணல் தொடர்பான ஆலோசனைகள் : வைத்தியர் திரு.S.P.தனுராஜ் (BSMS)
கருத்தரங்கு மண்டப நுழைவுக்கட்டணம் - 300/-
நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள்
1) அன்னை புத்தகசாலை - யாழ்நகர்
2) பாக்கியா காகிதாதிகள் - கொக்குவில்
3) Global Multi Trade Center - யாழ் இந்துக்கல்லூரி முன்பாக
4) Sarankan Multi Trade Center - யாழ் இந்துக்கல்லூரி முன்பாக
5) மகுடம் புத்தகசாலை - இணுவில்.
6) ரூபன் புத்தகசாலை - மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டைச் சந்தி
7) துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்.
8) மொடேன் ஸ்ரோர்ஸ் - நெல்லியடி.
9) வர்ணா புத்தகசாலை - கிளிநொச்சி.
புகழ்
மேலதிக விபரங்களுக்கு :-
0774118950, 021 2213061, 077 6510134
(3348)

**விமானத்துறையில்**
LANKA PACIFIC AVIATION ACADEMY
AIR-TECH Bildung Germany
கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் (O/L)உடன்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சியுடன் கூடிய கற்கைநெறிகள்
Aircraft Maintenance Engineering
விமானத்துறையில் பொறியியல்
(Conducting EASA Part 66 License Examination – category B1)
placement training 80 days in Germany or 90 Days in Malaysia
AIR HOSTESS (CABIN CREW)
விமான பணிப்பெண்
AIRLINE CATERING & MANAGEMENT
விமான உணவுகள் ஒழுங்குபடுத்தலும் மேலாண்மையும்
எமது காரியாலயத்தில் வகுப்புகளுக்கான பதிவுகளை மேற்கொள்ளலாம்.
மேலதிக தொடர்புகளுக்கு
KOPAY CENTER, KOPAY,JAFFNA
ACS
கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100m தொலைவில்
Tel: 77 9123 826 / 77 301 7147 / 77 007 1835
http:// www.facebook.com/AcsEducationConsultancy
(3324)

**கஜமுகன் டென்ரல் கிளினிக்**
நெல்லியடியில்
Dr. A. செந்தில்குமரன்
அவர்களினால்
நிரந்தரமாக பல் கட்டுதல்
நிரந்தரமான கிளிப் போடுதலும்
மற்றும் சகலவிதமான
பல் / வாய் சிகிச்சைகளும்
இடம்பெறுகின்றன.
கஜமுகன் டென்ரல் கிளினிக்
ம.ம. வீதி, நெல்லிடி,
T.P : 021 226 2888
(இலங்கை வங்கிக்கு அருகில்)

**புதுவீடு விற்பனைக்கு**
யாழ்.சுண்டுக்குளி பகுதியில்
அழகிய புது வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
(முழுவதும் மாபிள் பதிக்கப்பட்டது)
தொடர்புகளுக்கு: 0772032880
(3328)

**இதுவும் திசைகாட்டியின் மின்னல் வெளியீடு**
இவர்களும் கனடா சட்ட ரீதியாக செல்ல அருமருந்தன்ன வாய்ப்பு
அழகுக் கலை கனடாவில் படிக்க விரும்பும் ஆண்கள் பெண்கள் உடனடியாக பயணிக்க சட்ட ஆலோசனை ;
இவ்வாய்ப்பு 15.07.2013 வரை மட்டுமே
எமது விசேட கரும பீடம் இதற்காக காலை 7 முதல் இரவு 9 வரை திறந்திருக்கும்.
உங்கள் தாமதம் பின்னர் உங்கள் உள்ளம் வாட வைக்கும்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 0212219016, 0215689090
(C-3974)

**ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்**
**வருடாந்த பொதுக்கூட்டம்**
காலம் : 28-07-2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 2 மணி
இடம் : ஹாட்லிக் கல்லூரி
மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம். பிரேரணைகள் 22-07-2013 திகதிக்கு முன்னதாக தலைவர் / இணைச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கவும்.
தலைவர் / இணைச்செயலாளர்கள்,
ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்கள் மன்றம்,
ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
(3353)

அராலி - கரைப்பிட்டி கணபதீஸ்வரர் தேவஸ்தானம்
**புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்**
ஆனி மாதம் 30-ம் நாள் (14.07.2013) நாளை ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணிமுதல் 10.00 மணிவரை
அனைவரும் வருக! ஐங்கரன் அருள் பெறுக.
சுபம்
- கரைப்பிட்டி கணபதீஸ்வரர் தேவஸ்தானம்.
(3352)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
**Diploma in English** 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..
Batch1 : 06.7.2013
Batch2 : 08.7.2013
Batch3 : 13.7.2013
Batch4 : 15.7.2013
(C-3959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.